***கவனிக்க.***- இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் 2017 ஆம் ஆண்டிற்கான கேகாலை மாவட்ட நீதாசன வலயத்திற்குரிய யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2006 - 2017 පෙබරවාරි මස 09 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.02.09**

*2006 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 210 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 233 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி.வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2017, மாச்சு மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :.

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

*எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.*

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

*பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.*

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்*

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

*பரீட்சை ஆணையாளர் நாயகம்.*

*இலங்கை பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கைப் பொலிஸ்

உப பொலிஸ் பரிசோதகர் பதவி - விசேட அதிரடிப்படை

இலங்கை பொலிஸ் சேவையில் விசேட அதிரடிப் படையின் தகுதிகாண் உப பொலிஸ் பரிசோதகர் நேரடி ஆட்சேர்ப்பு பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுநர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, 1 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2017.03.10 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் இலங்கைப் பொலிஸினால் விண்ணப்பங்கள் வழங்கப்பட மாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்.**- ரூபா 3,93,480 - 7 X 4,440 - 2 X 5,940 - 25 X 7,920 - ரூபா 6,34,440.

2016.01.01 ஆந் திகதி முதல் 2020.01.01 வரை சம்பளம் பொது நிர்வாக சுற்றுநிருபம் இலக்கம் 3-2016 இன் பட்டோலை II இன் பிரகாரம் வழங்கப்படும். மேலும் 2020.01.01 முதல் முழுமையான சம்பள அளவுத் திட்டம் மேற்குறிப்பிட்டவாறு அமையும்.

* மேலும், இவ்வுத்தியோகத்தர்கள் 2013.01.07 ஆந் திகதிய பொலிஸ் மா அதிபர் சுற்றுநிருப இலக்கம் 2416/2013 இன் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவர்களாவர். மேற்குறிப்பிடப்பட்ட சம்பள அளவுத்திட்டத்திற்கு மேலதிகமாக கீழ்வரும் கொடுப்பனவுகளை மாதந்தோறும் பெறுவதற்கும் உரித்துடையவராவர் :

(அ) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு : 7,800 ரூபா;
(ஆ) ஊக்குவிப்புக் கொடுப்பனவு : 1,500 ரூபா
(இ) சீருடைகளைச் சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு 250 ரூபா ;
(ஈ) மாதாந்த சம்பளத்தில் 1/4 கொடுப்பனவு 3,962.50 ரூபா ;
(உ) கடினக் கொடுப்பனவுகள் : 2,000 ரூபா ;
(ஊ) இணைந்த கொடுப்பனவுகள் : 12,000 ரூபா (400 X 30 விசேட கொடுப்பனவுகள் வழங்கும் பிரதேசங்கள்)
(எ) இணைந்த கொடுப்பனவுகள் : 9,600 ரூபா (400 X 24 விசேட கொடுப்பனவுகள் வழங்காத பிரதேசங்கள்)

இந்தக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக :

(அ) இலவச போக்குவரத்து வசதிகள் ;
(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதிகள் (வெளி நாடுகளிலும் வைத்திய சிகிச்சைகளை பெறுவதற்கு நிதி மூலமான உதவித் தொகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்) ;
(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;
(ஈ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்வதற்கான வசதிகள் வழங்கப்படும் ;
(உ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகளுடன், கடினமான வேலைகளுக்காகவும் அத்துடன் திறமையாக கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும்.
(ஊ) விசேட அதிரப்படையின் அடிப்படை பயிற்சியை முடித்து விசேட அதிரடிப் படையின் சேவையில் ஈடுபடும் காலப்பகுதியில் மாத்திரம் விசேட அதிரடிப் படையின் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் விசேட கொடுப்பனவுகளைப் பெறுவதற்கான உரிமையுண்டு.

4. **தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) ***வயதெல்லை.***- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18-25 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே இலங்கை பொலிஸில் சேவையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்ப முடிவுத் திகதியன்று 27 வயதிற்கு உட்பட்டவர்களாக இருந்தால் அவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

(ஆ) ***கல்வித் தகைமைகள்.***- க. பொ. த. (சா. தர) பரீட்சையில் கணிதம் மற்றும் தாய்மொழி உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

அத்துடன்

க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1.**- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க. பொ. த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2.**- க.பொ. த. (சா.தர) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராகக் கருதப்படுவர்.

**குறிப்பு 3.**- விருப்பத்திற்குரிய தமிழ்/ ஆங்கிலம்/ சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத்திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாமையால்

அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்பட மாட்டாது.

(இ) ***உடற் தகைமைகள் :***

* உயரம் : 5 அடி 6 அங்குலம் (ஆகக் குறைந்தது)
* மார்பு : 32 அங்குலம் (ஆகக் குறைந்தது மூச்சு விட்ட நிலையில்)

**குறிப்பு 1.**- சிறந்த விளையாட்டுத் திறமையுடன் தேசிய விளையாட்டுக் குழாத்திலிருந்து தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் உடற்றகைமைகள் சற்று குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிபின்படி தகைமை பெறுவர்.

(ஈ) பார்வை தொடர்பான தேவை.- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 இற்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பினும் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரண மாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் சேவைக்கு தகைமை அற்றவராவார்.

(உ) பிற தகைமைகள்.- விண்ணப்பதாரர் திருமணமாகாத வராக இருத்தல் வேண்டும். (விவாகரத்து பெற்றவர் கள் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவர்). மற்றைய தகைமைகள் உடைய ஏற்கனவே இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் சேவையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இந்நிபந்தனை மாத்திரம் ஏற்புடையதாகாது.

5. **ஆட்சேர்ப்பு முறை.**- விண்ணப்பங்களின்படி தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் இலங்கைப் பொலிஸினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகைமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற்தகுதிப் பரீட்சையில் பங்குபற்றி சித்தியெய்துதல் வேண்டும்.

***உடற்றகுதிப் பரீட்சை :***

| பயிற்சி | தடவைகள் | நேரம் (நிமிடத்தில்) |
|---|---|---|
| 1000 மீற்றர் ஓட்டம் | - | 04 |
| சின்அப்ஸ் (Chin ups) | 06 | 01 |
| புஷ் அப்ஸ் (Push ups) | 20 | 01 |
| சிடப் (Sit ups) | 20 | 01 |
| ஸ்கொட் டிரஷ் (Scott thrush) | 18 | 01 |

* தன்னம்பிக்கையை சோதிப்பதற்கான பரீட்சை (தடைகள் ஊடுருவல் பயிற்சி).
* ஆரம்ப சக்தி மற்றும் பிரதிபலிப்பு சம்பந்தமான பரீட்சை.
* உடற்றகுதிப் பரீட்சையில் மற்றும் மனோவலிமைப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இந்நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை உள்ளடக்கியது. அவை :

* 45 நிமிடங்களில் 500 சொற்களுக்குக் குறையாமல் ஒரு விடயம் தொடர்பாக ஒரு கட்டுரை பற்றிய வினாத்தாள் எழுதுதல்.
* பொது அறிவும் நுண்ணறிவும் (1 மணித்தியாலம்).

6. **மருத்துவப் பரிசோதனை :**

* விண்ணப்பதாரர் தனது நியமனத்தைப் பெற முன்னர் மருத்துவ பரிசோதனையில் சித்தியடைய வேண்டும். மருத்துவ பரிசோதனையானது ஆட்சேர்ப்பு செயற்பாட்டில் ஒரு அங்கம் மட்டுமே ஆகும். மருத்துவ பரிசோதனையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் தற்போது உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை, முன்னுரிமை மற்றும் அவர்களது திறமை அடிப்படை யில் அமைந்த பட்டியலின்படி தெரிவுசெய்யப்படுவர். மருத்துவப் பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

7. **பின்னணி விசாரணைகள்.**- (அ) விண்ணப்பதாரியின் நன்நடத்தையும் அவரின் நெருங்கிய உறவினர்கள், நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். பின்னணி விசாரணைகளில் ஏதேனும் பாதகமான காரணிகள் இருந்தால் அவ் விண்ணப்பதாரர்கள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரர் பொய்யான தகவல்கள் வழங்குவது அல்லது மூடி மறைப்பது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவார்.

8. ***அரச கரும மொழிக் கொள்கையை அமுல் படுத்துதல் :***

- பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 2007.04.28 ஆந் திகதிய 07/ 2007ஆம் இலக்க சுற்று நிருபத்தின் பிரகாரம், 2007.07.01 ஆந் திகதியிலிருந்து அரச சேவைக்கு/ மாகாண அரச சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழித் தேர்ச்சியை சேவையில் இணைந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் பெறல் வேண்டும்.

- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இரண்டாம் மட்ட மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

- நியமனத் திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் உரிய இரண்டாம் அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெறாத உத்தியோகத்தர்களின் சம்பள ஏற்றங்கள் நிறுத்தி வைக்கப்படும்.

9. **நியமனக் கொள்கைகள்.**- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள்/ தபுதாரர்/ அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு அங்கத்துவப் பணம் செலுத்துதல் வேண்டும்.

10. **சேவை நிபந்தனைகள்.**- (அ) நியமனம் 3 ஆண்டு கால தகுதிகாண் அடிப்படையில் இருக்கும்.

(ஆ)தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரச கரும மொழிக் கொள்கைக்கு இணங்க ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக் கோவையின் I ஆம், II ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகள், நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்படல் வேண்டும்.

(ஈ) பதவி உறுதிப்படுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் இலங்கைப் பொலிஸினால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். குறித்த பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்கள்.

(உ) நியமனம் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள். எனினும் 1973.02.28 ஆந் திகதிய 41 ஆம் இலக்கம் கொண்ட பொலிஸ் வர்த்தமானியின் பகுதி II இன் பிரகாரமும் மற்றும் 2006.10.19 ஆந் திகதிய மற்றும் 1952/ 2006 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்று நிருபத்தின் பிரகாரமும் 2007.08.09 ஆந் திகதியுடைய திருத்தம் செய்யப்பட்ட அச் சுற்றுநிருபத்தின் பிரகாரமும் திருமணம் செய்வதற்கான விசேட காரணங்களைத் தெரிவித்து பொலிஸ் மா அதிபரின் அனுமதியுடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட தகுதிகாண் நிலையில் இலங்கைப் பொலிஸில் பணியாற்ற வேண்டியதுடன் இத்தகுதிகாண் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களைச் செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட வேண்டும். அப்பெறுமதியானது இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகலை ஏற்றுக் கொள்ளலானது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) தகுதிகாண் உப பொலிஸ் பரிசோதகர்கள் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் தமது பயிற்சியை ஆரம்பித்தவுடன் உடனடியாக பின் இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 1693/ 2003 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத் திற்கு இணங்க பொலிஸ் ஒழுக்காற்று கோவையினை பின்பற்று வதாக சத்தியப் பிரமாணம்/ உறுதி செய்தல் வேண்டும்.

(ஏ) தகுதிகாண் உப பொலிஸ் பரிசோதகர்கள் பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் உடனடியாக பொலிஸ் மா அதிபரின் 1804/ 2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு கட்டுப்பட்டு நடப்பதாக சுய உறுதி செய்தல் வேண்டும்.

(ஒ) தகுதிகாண் உப பொலிஸ் பரிசோதகர்கள் தமது பதவியில் உறுதிப்படுத்திய பின் இலங்கைப் பொலிஸில் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவார்.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) ஆம் பந்தியின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட அரச சேவை பதவிகளுக்கு நியமனம் செய்வதற்குரிய பொது நிபந்தனைகள் செல்லுபடியாகும்.

(ஆ)1990.03.10 ஆந் திகதிய 15/ 90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும். (மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது);

(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது ஏனைய புறக் கிருத்தி செயற்பாடுகள் பற்றிய சான்றிதழ்கள் ;

(உ) சேவையில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின் மாத்திரம்) ;

(ஊ) தேசிய ஆள் அடையாள அட்டையின் நிழற் பிரதி ;

13. (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்ப தாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன்

விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ)விண்ணப்பதாரர் 11" x 8" அளவிலான தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தமது சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தி சான்றிதழ்களது பிரதிகளுடன் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இத்திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் விண்ணப்பங்களை பிரத்தியேகமாக கையளித்தலாகாது.

14. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்பட மாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்படமாட்டாது.

பூஜித் ஜயசுந்தர,
பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைகப் பொலிஸ்**

உப பொலிஸ் பரிசோதகர் பதவி - விசேட அதிரடிப் படை

| |
|---|
| |

அலுவலக உபயோகத்திற்கு

1. (அ)முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழ்களில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ)பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பிக்கும் பதவி :-----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :-----.
(பிரதியை இணைக்கவும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்துக்குரிய பிரதேச செயலகப் பிரிவு :-----.
மாகாணம் :-----.

5. (அ)தற்போதைய முகவரி :-----.

(ஆ)தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் : -----.

(இ) நிரந்தர முகவரி :-----.

(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(உ) நிரந்தர முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு : -----. பிரதேச செயலகம் :-----.

(ஊ) வீட்டு தொலைபேசி இலக்கம் :-----.
கையடக்கத் தொலைபேசி இலக்கம் :-----.

6. (அ)தேசிய இனம் :-----.

(ஆ)நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----

(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசையானால் பின்வருபவர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின் தந்தை வழி பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் : -----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----;
மார்பு : அங்குலம் :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. மேலதிகத் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

11. திருமணம் ஆனவரா/ திருமணம் ஆகாதவரா ? :-----.

12. (அ)தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ)நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? : -----.

13. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/ தகைமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இரு நபர்களின் பெயர் முகவரிகளைக் குறிப்பிடுக :-

(அ)-----.
(ஆ)-----.

15. நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையில் சேவை செய்துள்ளீரா ? ஆம் எனின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக ? :-----.

16. (அ)நீங்கள் ஆயுதப்படை சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ)நீங்கள் ஆயுதப்படையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும் :-----.

17. (அ)நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படைத் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ)நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

18. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீரா ? அல்லது தண்டனை பெற்றுள்ளீரா? அவ்வாறாயின் விபரம் தருக. :-----.

19. உங்கள் உறவினர்கள் எவரேனும் குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அவ்வாறாயின் ஏதேனும் குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனரா அல்லது குற்றம் சுமத்தப்பட்டுள்ளனரா ? அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா ? அவ்வாறாயின் விபரம் தருக :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்களசேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பினும் எந்தச் சந்தர்ப்பத்திலும் பொலிஸ் சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

20. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் - (தேவையேற்படின்) :

இந்த விண்ணப்பதாரி ....................................... அவர்கள் இத்திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவையாற்றுபவர் எனவும் அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும் எனவும் தெரிவிக்கிறேன்.

.................,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பதவி :-----.
திகதி :-----.

2-460/ 1

---

## இலங்கைப் பொலிஸ்

பொலிஸ் கொஸ்தாபல் பதவி - விசேட அதிரடிப்படை

இலங்கை பொலிஸ் சேவையில் விசேட அதிரடிப் படை யின் பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் பதவிக்கு நேரடி ஆட்சேர்ப்புக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுநர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, 1 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2017.03.10 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் இலங்கைப் பொலிஸினால் விண்ணப்பங்கள் வழங்கப்பட மாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 3,54,480 - 7 x 3,600 - 27 x 4,440 - ரூபா 4,99,560.

2016.01.01 ஆந் திகதி முதல் 2020.01.01 வரை சம்பளம் பொது நிர்வாக சுற்றுநிருபம் இலக்கம் 3-2016 இன் பட்டோலை II இன் பிரகாரம் வழங்கப்படும். மேலும் 2020.01.01 முதல் முழுமையான சம்பள அளவுத் திட்டம் மேற்குறிப்பிட்டவாறு அமையும்.

மேலும், இவ்வுத்தியோகத்தர்கள் 2013.01.07 ஆந் திகதிய பொலிஸ் மா அதிபர் சுற்றுநிருப இலக்கம் 2416/ 2013 இன் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவர்களாவர். மேற்குறிப்பிடப்பட்ட சம்பள அளவுத்திட்டத்திற்கு மேலதிகமாக கீழ்வரும் கொடுப்பனவுகளை மாதந்தோறும் பெறுவதற்கும் உரித்துடையவராவர் :

(அ) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு : 7,800 ரூபா ;

(ஆ) ஊக்குவிப்புக் கொடுப்பனவு : 1,500 ரூபா

(இ) சீருடைகளைச் சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு 250 ரூபா ;

(ஈ) மாதாந்த சம்பளத்தில் 1/ 4 கொடுப்பனவு 3,570 ரூபா ;

(உ) கடினக் கொடுப்பனவுகள் : 2,000 ரூபா ;

(ஊ) இணைந்த கொடுப்பனவுகள் : 10,500 ரூபா (350 X 30 விசேட கொடுப்பனவுகள் வழங்கும் பிரதேசங்கள்)

(எ) இணைந்த கொடுப்பனவுகள் : 8,400 ரூபா (350 X 24 விசேட கொடுப்பனவுகள் வழங்காத பிரதேசங்கள்)

இந்தக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக :

(அ) இலவச போக்குவரத்து வசதிகள் ;

(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளிநாடுகளிலும் வைத்திய சிகிச்சைகளைப் பெறுவதற்கு நிதி மூலமான உதவித்தொகைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும் ;

(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;

(ஈ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்வதற்கான வசதிகள் வழங்கப்படும் ;

(ஏ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகளுடன், கடினமான வேலைகளுக்காகவும் அத்துடன் திறமையாக கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும்.

(ஊ) விசேட அதிரப்படையின் அடிப்படை பயிற்சியை முடித்து விசேட அதிரடிப் படையின் சேவையில் ஈடுபடும் காலப்பகுதியில் மாத்திரம் விசேட அதிரடிப் படையின் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் விசேட கொடுப்பனவுகளைப் பெறுவதற்கான உரிமையுண்டு.

**4. தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) ***வயதெல்லை.-*** வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18-25 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே இலங்கைப் பொலிஸில் சேவையாற்றும் பொலிஸ் கொஸ்தாபல், சாரதி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 27 வயதிற்கு உட்பட்டவர்களாக இருந்தால் அவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

(ஆ) ***கல்வித் தகைமைகள்.-*** க.பொ.த. (சா. தர) பரீட்சையில் கணிதம்/ தாய்மொழி உட்பட இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரண்டு தடவைகள் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரர்கள் முதலாவது தடவையில் ஒரே முறையில் 5 பாடங்களில் கணிதம்/ தாய்மொழி இரண்டு பாடங்களில் அல்லது ஒரு பாடத்திலேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1.-** இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க. பொ. த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2.-** க. பொ. த. (சா. தர) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராகக் கருதப்படுவர்.

**குறிப்பு 3.-** விருப்பத்திற்குரிய தமிழ்/ ஆங்கிலம்/ சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத்திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்பட மாட்டாது.

(இ) ***பௌதிகத் தகைமைகள்*** :

* உயரம் : 5 அடி 4 அங்குலம் (ஆகக் குறைந்தது)

* மார்பு : 30 அங்குலம் (ஆகக் குறைந்தது மூச்சு விட்ட நிலையில்)

**குறிப்பு 1.-** சிறந்த விளையாட்டுத் திறமையுடன் தேசிய விளையாட்டுக் குழாத்திலிருந்து தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் பௌதிகத் தகைமைகள்

சற்று குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிபின்படி தகைமை பெறுவர்.

(ஈ) ***பார்வை தொடர்பான தேவை.***- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 இற்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/ 6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பினும் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் சேவைக்கு தகைமை அற்றவராவார்.

(உ) ***பிற தகைமைகள்.***- விண்ணப்பதாரர் திருமண மாகாதவராக இருத்தல் வேண்டும் (விவாகரத்துப் பெற்றவர்கள் தகுதியற்றவராகக் கருதப்படுவர்). மற்றைய தகைமைகள் உடைய ஏற்கனவே இலங்கை பொலிஸில் சேவையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இந்நிபந்தனை மாத்திரம் ஏற்புடையதாகாது.

5. ***ஆட்சேர்ப்பு முறை.***- விண்ணப்பங்களின்படி தகைமைபெறும் விண்ணப்பதாரிகள் பொலிஸ் சேவையில் நடாத்தப்படும் அடிப்படைத் தகைமைப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற்தகுதிப் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.-

* உடற் தகுதிப் பரீட்சை :

| பயிற்சி | தடவைகள் | நேரம் (நிமிடத்தில்) |
|---|---|---|
| 1000 மீற்றர் ஓட்டம் | - | 04 |
| சின்அப்ஸ் (Chin ups) | 05 | 01 |
| புஷ் அப்ஸ் (Push ups) | 15 | 01 |
| சிட் அப்ஸ் (Sit ups) | 15 | 01 |
| ஸ்கொட் டிரஷ் (Scott thrush) | 12 | 01 |

- உடற் தகுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(i) எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை உள்ளடக்கியது. அவை :

* 45 நிமிடங்களில் 500 சொற்களுக்குக் குறையாமல் ஒரு விடயம் தொடர்பாக கட்டுரை எழுதுதல்.

* பொது அறிவும் நுண்ணறிவும் (1 மணித்தியாலம்)

6. **மருத்துவப் பரிசோதனை :**

* விண்ணப்பதாரர் தனது நியமனத்தைப் பெற முன்னர் மருத்துவ பரிசோதனையில் சித்தியடைய வேண்டும். மருத்துவ பரிசோதனையானது ஆட்சேர்ப்பு செயற்பாட்டில் ஒரு அங்கம் மட்டுமே ஆகும். மருத்துவ பரிசோதனையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் தற்போது உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை, முன்னுரிமை மற்றும் அவர்களது திறமை அடிப்படையில் அமைந்த பட்டியலின்படி தெரிவுசெய்யப்படுவர். மருத்துவ பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

7. **பின்னணி விசாரணைகள்.**- (அ) விண்ணப்பதாரியின் நன்நடத்தையும் அவரின் நெருங்கிய உறவினர்கள், நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். பின்னணி விசாரணையில் ஏதேனும் பாதகமான காரணங்கள் இருந்தால் அவ்விண்ணப்பதாரர்கள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரர் பொய்யான தகவல்கள் வழங்குவது அல்லது மூடி மறைப்பது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவர்.

8. **அரச கரும மொழிக் கொள்கையை அமுல் படுத்துதல் :**

- பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 2007.04.28 ஆந் திகதிய 07/ 2007ஆம் இலக்க சுற்று நிருபத்தின் பிரகாரம், 2007.07.01 ஆந் திகதியிலிருந்து அரச சேவைக்கு/ மாகாண அரச சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழித் தேர்ச்சியை சேவையில் இணைந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் பெறல் வேண்டும்.

- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இரண்டாம் மட்ட மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

- நியமனத் திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் உரிய இரண்டாம் மொழித் தேர்ச்சியைப் பெறாத உத்தியோகத்தர்களின் சம்பள ஏற்றங்கள் நிறுத்தி வைக்கப்படும்.

9. **நியமனக் கொள்கைகள்.**- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள்/ தபுதாரர்/ அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

10. **சேவை நிபந்தனைகள்**.- (அ) நியமனம் 3 ஆண்டு கால பயிலுநர் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரச கரும மொழிக் கொள்கையை அமுல்படுத்தவும் ஏற்கனவே விதிக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் விதிக்கப்படக்கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபன விதிக்கோவையின் I ஆம், II ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகள், நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்படல் வேண்டும்.

(ஈ) பதவி உறுதிப்படுத்தப்படுவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் இலங்கை பொலிஸினால் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்தியெய்தல் வேண்டும். குறித்த பரீட்சைகளில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு இடமுண்டு.

(உ) நியமனம் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள். எனினும் 1973.02.28 ஆந் திகதிய 41 ஆம் இலக்கம் கொண்ட பொலிஸ் வர்த்தமானியின் பகுதி II இன் பிரகாரமும் மற்றும் 2006.10.19 ஆந் திகதிய மற்றும் 1952/ 2006 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்று நிருபத்தின் பிரகாரமும், 2007.08.09 ஆந் திகதிய திருத்தஞ் செய்யப்பட்ட அச்சுற்றுநிருபத்தின் பிரகாரமும் திருமணம் செய்வதற்கான விசேட காரணங்களைத் தெரிவித்து பொலிஸ் மா அதிபரின் அனுமதியுடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற் சிக்குப் பின் 3 வருட பயிலுநர் நிலையில் பொலிஸில் பணியாற்ற வேண்டியதுடன் இப்பயிலுநர் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களைச் செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட வேண்டும். அப்பெறுமதியானது இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகலை ஏற்றுக் கொள்ளலானது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல்கள் பயிற்சியினை ஆரம்பித்தவுடன் உடனடியாக 1693/ 2003 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்திற்கு இணங்க பொலிஸ் ஒழுக்காற்று கோவையினை பின்பற்றுவதாக சத்தியப்பிரமாணம்/ உறுதி செய்தல் வேண்டும்.

(ஏ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல்கள் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் உடனடியாக பொலிஸ் மா அதிபரின் 1804/ 2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அபிமானம்மிக்க அரச சேவைக்கான அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக சுய உறுதி செய்தல் வேண்டும்.

(ஒ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல்கள் தமது பதவியில் உறுதிப்படுத்திய பின் இலங்கைப் பொலிஸில் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவார்.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) இன் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட அரச சேவை பதவிகளுக்கு நியமனம் செய்வதற்குரிய பொது நிபந்தனைகள் செல்லுபடியாகும்.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/ 90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும். (மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது) ;

(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது ஏனைய புறக் கிருத்தி செயற்பாடுகள் பற்றிய சான்றிதழ்கள் ;

(உ) சேவையில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின் மாத்திரம்) ;

(ஊ) தேசிய ஆள் அடையாள அட்டையின் நிழற்படப் பிரதி ;

13. (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்ப தாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11" x 8" அளவிலான தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தமது சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தி சான்றிதழ்களது பிரதிகளுடன் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இத்திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் விண்ணப்பங்களை பிரத்தியேகமாக கையளித்தலாகாது.

14. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்பட மாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

பூஜித் ஜயசுந்தர,
பொலிஸ் மா அதிபர்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு)

**இலங்கைப் பொலிஸ்**

பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் பதவி - விசேட அதிரடிப் படை

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழில் உள்ள படியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பிக்கும் பதவி :-----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :-----. (பிரதியை இணைக்கவும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்துக்குரிய பிரதேச செயலகப் பிரிவு :-----.
மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.
(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் : -----.
(இ) நிரந்தர முகவரி :-----.

(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(உ) நிரந்தர முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு : -----. பிரதேச செயலகம் :-----.

(ஊ) தொலைபேசி இலக்கம் (இருப்பின்) வதிவிடம் :-----, கையடக்கத் தொலைபேசி இலக்கம் :-----.

6. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----

(இ) நீங்கள் வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசையானால் பின்வருபவர்களின் பிறந்த இடங்களைக் குறிப் பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின் தந்தைவழி பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தைவழி முப்பாட்டன் : -----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----; மார்பு : (அங்குலம்) :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப் பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. மேலதிகத் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

11. திருமணம் ஆனவரா/ திருமணம் ஆகாதவரா ? :-----.

12. (அ)தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ)நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? : -----.

13. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/ தகைமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இரு நபர்களின் பெயர் முகவரிகளைக் குறிப்பிடுக :-

(அ)-----.
(ஆ)-----.

15. நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையில் சேவை செய்துள்ளீரா ? (ஆம் எனின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக ? :-----.

16. (அ) நீங்கள் ஆயுதப்படை சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட ஆயுதப்படை சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் ஆயுதப்படையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும் :-----.

17. (அ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருக்கின்றீர்களா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட படைத் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும் :-----.

(ஆ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

18. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீரா ? அல்லது தண்டனை பெற்றுள்ளீரா ? அவ்வாறாயின் விபரம் தருக. :-----.

19. உங்கள் உறவினர்கள் எவரேனும் குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அவ்வாறாயின் ஏதேனும் குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனரா ? அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா? அவ்வாறாயின் விபரம் தருக :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத்திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

20. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (தேவையேற்படின்) :

இந்த விண்ணப்பதாரி ....................................... அவர்கள் இத்திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவையாற்றுபவர் எனவும் அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும் எனவும் தெரிவிக்கிறேன்.

................,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

பதவி :-----.
திகதி :-----.

2-460/ 2

---

## இலங்கைப் பொலிஸ்

### பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி (விசேட அதிரடிப்படை)

இலங்கை பொலிஸ் சேவையில் விசேட அதிரடிப்படை பயிலுநர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர், பயிலுநர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, 1 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2017.03.10 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் இலங்கைப் பொலிஸினால் விண்ணப்பங்கள் வழங்கப்பட மாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்.**- ரூபா 3,54,480 - 7 ×3,600 - 27 x 4,440 - ரூபா 4,99,560.

2016.01.01 ஆந் திகதி முதல் 2020.01.01 ஆந் திகதிவரை சம்பளம் பொது நிர்வாக சுற்றுநிருபம் இலக்கம் 3-2016 இன் பட்டோலை II இன் பிரகாரம் வழங்கப்படும். மேலும் 2020.01.01 முதல் முழுமையான சம்பள அளவுத் திட்டம் மேற்குறிப்பிட்டவாறு அமையும்.

மேலும், இவ்வுத்தியோகத்தர்கள் 2013.01.07 ஆந் திகதிய பொலிஸ் மா அதிபர் சுற்றுநிருப இலக்கம் 2416/ 2013 இன் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவர்களாவர். மேற்குறிப்பிடப்பட்ட சம்பளத்திற்கு மேலதிகமாக கீழ்வரும் கொடுப்பனவுகளை மாதந்தோறும் பெறுவதற்கும் உரித்துடையவராவர் :-

(அ) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு : 7,800 ரூபா ;
(ஆ) ஊக்குவிப்புக் கொடுப்பனவு : 1,500 ரூபா ;
(இ) சீருடைகளைச் சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு 250 ரூபா ;
(ஈ) மாதாந்த சம்பளத்தில் கொடுப்பனவு (1/ 4 கொடுப்பனவு) : 3,570 ரூபா ;
(உ) கடினக் கொடுப்பனவு : 2,000 ரூபா
(ஊ) இணைந்த கொடுப்பனவுகள் : 10,500 ரூபா (350 X 30 விசேட கொடுப்பனவுகள் வழங்கும் பிரதேசங்கள்) ;
(எ) இணைந்த கொடுப்பனவுகள் : 8,400 ரூபா (350 X 24 விசேட கொடுப்பனவுகள் வழங்காத பிரதேசங்கள்) ;

இந்த கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக :

(அ) இலவச போக்குவரத்து வசதிகள் ;
(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளிநாடாக இருப்பினும் வைத்திய வசதிகள் பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும் ;
(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப் படும் ;
(ஈ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான வசதிகள் வழங்கப் படும் ;
(உ) கடமைகளுக்கான பிரயாணச் செலவு களுடன், கடினமான வேலைகளுக் காகவும் அத்துடன் திறமையாக கடமை களைச் செய்வதற்காகவும் வெகு மதிகளாகப் பணம் வழங்கப்படும் ;
(ஊ) விசேட அதிரடிப்படையின் அடிப் படைப் பயிற்சியை முடித்து விசேட அதிரடிப் படையில் சேவையில் ஈடுபடும் காலப்பகுதியில் மாத்திரம் விசேட அதிரடிப்படையின் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் விசேட கொடுப்பனவுகளைப் பெறுவ தற்கான உரிமையுண்டு.

**4. தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) ***வயதெல்லை.-*** வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18-25 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) கல்வித் தகைமைகள்.- க. பொ. த. (சா. தர) பரீட்சையில் கணிதம்/ தாய்மொழி உட்பட இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரண்டு தடவைகள் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரர்கள் முதலாவது தடவையில் ஒரே முறையில் 5 பாடங்களில் கணிதம்/ தாய்மொழி இரண்டு பாடங்களில் அல்லது ஒரு பாடத்திலேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

**குறிப்பு 1.-** இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பாட வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக் கையை வகைப்படுத்தும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க. பொ. த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2.-** க.பொ. த. (சா. தர) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தபோதும் அப்பாடத் தில் சித்தியடையாதவராகக் கருதப்படும்.

**குறிப்பு 3.-** விருப்பத்திற்குரிய தமிழ்/ ஆங்கிலம்/ சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத்திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்பட மாட்டாது.

(இ) ***பௌதிகத் தகைமைகள் :***

* ***உயரம் :*** 5 அடி 4 அங்குலம் (ஆகக் குறைந்தது)

**குறிப்பு 1.-** சிறந்த விளையாட்டுத் திறமையுடன் தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் உடல் தகுதி தேவைப்பாடுகள் சற்று குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிபின்படி தகைமை பெறுவர்.

(ஈ) ***பார்வை தொடர்பான தேவை.-*** ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 இற்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பினும் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவார்.

(உ) ***பிற தகைமைகள்.-*** விண்ணப்பதாரர் திருமண மாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்து பெற்றவர்கள் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவர்).

5. **ஆட்சேர்ப்பு முறை.-** தெரிவுசெய்யப்படும் விண்ணப்ப தாரிகள் இலங்கைப் பொலிஸினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகைமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற்தகுதிப் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.-

| பயிற்சி | தடவைகள் | நேரம் (நிமிடத்தில்) |
|---|---|---|
| 1000 மீற்றர் ஓட்டம் | - | 06 |
| புஷ் அப்ஸ் (Push ups) | 15 | 01 |
| சிட் அப்ஸ் (Sit ups) | 15 | 01 |
| ஸ்கொட் டிரஷ் (Scott thrush) | 12 | 01 |

உடற் தகுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் இறுதி எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர் :

(i) இவ் எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை உள்ளடக்கியது. அவை :

* 45 நிமிடங்களில் 500 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை பற்றிய வினாத்தாள் எழுதுதல்.
* பொது அறிவும் நுண்ணறிவுப் பரீட்சைக் காலம் (1 மணித்தியாலம்)

6. **மருத்துவப் பரிசோதனை** :

* விண்ணப்பதாரர் தனது நியமனத்தைப் பெற முன்னர் மருத்துவ பரிசோதனையில் சித்தியடைய வேண்டும். மருத்துவ பரிசோதனையானது ஆட்சேர்ப்பு செயற்பாட்டில் ஒரு அங்கம் மட்டுமே ஆகும். மருத்துவ பரிசோதனையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் தற்போது உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை, முன்னுரிமை மற்றும் ஆகக்கூடிய புள்ளிகள் மற்றும் அவர்களது திறமை அடிப்படையில் அமைந்த பட்டியலில் அவர்களின் நிலையின் அடிப்படையிலேயே தெரிவுசெய்யப்படுவர். மருத்துவ பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

7. **பின்னணி விசாரணைகள்**.- (அ) விண்ணப்பதாரியின் நன்நடத்தையும் அவரின் நெருங்கிய உறவினர்கள், நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். துர்நடத்தையுள்ள விண்ணப்பதாரர்கள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரர் பொய்யான தகவல்கள் வழங்குவது அல்லது மறைப்பது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவார்.

8. **அரச கரும மொழித் தேர்ச்சிக் கொள்கையை அமுல் படுத்துதல்** :

- பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 07/ 2007ஆம் இலக்க 2007.04.28 ஆந் திகதிய சுற்று நிருபத்தின் பிரகாரம், 2007.01.01 ஆந் திகதியிலிருந்து அரச சேவைக்கு/ மாகாண அரச சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழிகளிலும் சேவையில் சேர்ந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சி பெறல் வேண்டும்.

- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இரண்டாம் மட்ட மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

- நியமனத் திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் அரச கரும மொழியில் சித்தியடையாத வர்கள் குறித்த மொழியில் தேர்ச்சி அடையும்வரை சம்பள ஏற்றம் நிறுத்தி வைக்கப்படும்.

9. **நியமனக் கொள்கைகள்**.- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள்/ தபுதாரர்/ அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு அங்கத்துவப் பணம் செலுத்துதல் வேண்டும்.

10. **சேவை நிபந்தனைகள்**.- (அ) நியமனம் 3 ஆண்டு கால தகுதிகாண் அடிப்படையில் இருக்கும்.

(ஆ)தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரச கரும மொழிக் கொள்கைக்கு இணங்க ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக் கோவையின் I ஆம், II ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகள், நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவர்கள் ஆவார்கள்.

(ஈ) பதவி உறுதிப்படுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்கள்.

(உ) நியமனம் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொலிஸ்மா அதிபரின் அனுமதி இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய முடியாது. எனினும் 1973.02.28 ஆந் திகதிய பொலிஸ் வர்த்தமானி II இன் 41 ஆம் இலக்க அறிவித்தலுக்கு அமைய மற்றும் 2006.10.19 ஆந் திகதிய பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபம் இலக்கம் 1952/ 2006 மற்றும் 2007.08.09 ஆந் திகதிய அச்சுற்றுநிருபத்தின் திருத்தத்தின் பிரகாரம் பொலிஸ் மா அதிபரின் அனுமதியுடன் விசேட காரணங்களைத் தெரிவித்து திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட தகுதிகாண் நிலையில் இலங்கைப் பொலிஸ் சேவையில் பணியாற்ற வேண்டியதுடன் தகுதிகாண் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களைச் செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட வேண்டும். அப்பெறுமதியானது இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகலை ஏற்றுக்கொள்வதை 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) ஆட்சேர்க்கப்படும் பயிலுநர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியினை ஆரம்பித்த வுடன் உடனடியாக, இல. 1693/2003 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்திற்கு இணங்க பொலிஸ் ஒழுக் காற்றுக் கோவையினை பின்பற்றுவதாக பிரமாணம் செய்தல் வேண்டும்.

(ஏ) ஆட்சேர்க்கப்படும் பயிலுநர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பயிற்சியை ஆரம்பித்தவுடன் உடனடியாக பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி/சத்தியப்பிரமாணம் செய்தல் வேண்டும்.

(ஒ) ஆட்சேர்க்கப்படும் பயிலுநர் பெண் பொலிஸ் கொஸ் தாபல் பதவி நிரந்தரமான பின்னர் பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு வாய்ப்புண்டு.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) இல் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். (மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குண நலச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது);

(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்திற்கு புறம்பாகப் பெற்ற சான்றிதழ்கள் ;

(உ) தொழில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின்) ;

(ஊ) தேசிய ஆள் அடையாள அட்டையின் நிழற் பிரதி ;

13. (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்ப தாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும். விண்ணப்பதாரர் இச்சான்றிதழ் இல்லாமல் விண்ணப்பம் அனுப்பினால் அது நிராகரிக்கப்படும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11" X 8" அளவிலான தாளில் தயாரிக் கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தமது சொந்தக் கையெழுத்தில் வேண்டப்பட்ட விபரங்களைப் பூரணப்படுத்தி சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இத்திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் விண்ணப்பங்களை பிரத்தியேகமாக கையளித்தலாகாது.

14. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்பட மாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

பூஜித் ஜயசுந்தர,
பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பொலிஸ் திணைக்களம்**

| |
|---|
| |

அலுவலக உபயோகத்திற்கு

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழில் உள்ள படியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பதாரரின் பதவி :-----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :-----. (பிரதியை இணைக்கவும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்துக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.

(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் : -----.

(இ) நிரந்தர முகவரி :-----.

(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(உ) நிரந்தர முகவரிக்குரிய தேர்தல் மாவட்டம் :-----.

(ஊ) நிரந்தர முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு : -----. பிரதேச செயலகம் :-----.

(எ) தொலைபேசி இலக்கம் (வதிவிடம்) :-----, கையடக்கத் தொலைபேசி இலக்கம் :-----.

6. (அ)தேசிய இனம் :-----.

(ஆ)நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----

(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசையானால் பின்வருபவர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின் தந்தை வழிப் பாட்டன் : -----.
(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் : -----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. மேலதிகத் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

11. திருமணம் ஆனவரா/ திருமணம் ஆகாதவரா ? :-----.

12. (அ)தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ)நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? : -----.

13. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/ தகைமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இரு நபர்களின் பெயர், முகவரிகளைக் குறிப்பிடுக :-

(i) -----.
(ii) -----.

15. நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையில் சேவை செய்துள்ளீரா ? (ஆம் எனின், அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக ?) :-----.

16. (அ)நீங்கள் ஆயுதப்படைச் சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட ஆயுதப்படை சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ)நீங்கள் ஆயுதப் படைச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும் :-----.

17. (அ)நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட ஆயுதப்படைத் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ)நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

18. நீங்கள் ஏதாவது தவறு தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீரா ? அல்லது தண்டனை பெற்றுள்ளீரா? அவ்வாறாயின் விபரம் தருக. :-----.

19. உங்கள் உறவினர்கள் எவரேனும் தவறு சம்பந்தப்பட்ட சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அவ்வாறாயின், ஏதேனும் குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு இழைக்கப்பட்டுள்ளனரா? அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா ? அவ்வாறாயின் விபரம் தருக :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் இலங்கை பொலிஸ் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத்திலும் இலங்கை பொலிஸ் சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

20. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (தேவையேற்படின்) :

இந்த விண்ணப்பதாரி ...................................... அவர்கள் இத்திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவையாற்றுபவர் எனவும் அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது எனவும் தெரிவிக்கிறேன்.

.................,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரை இடப்படல் வேண்டும்).

பதவி :-----.
திகதி :-----.

2-460/ 3

---

**இலங்கைப் பொலிஸ்**

பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதிப் பதவி
(விசேட அதிரடிப்படை)

இலங்கை பொலிஸ் சேவையில் பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவி நேரடி ஆட்சேர்ப்பிற்கு இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுநர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, 1 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2017.03.10 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பி வைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் இலங்கைப் பொலிஸ் சேவையினால் விண்ணப்பங்கள் வழங்கப்பட மாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்.**- ரூபா 3,54,480 - 7 X 3,600 - 27 X 4,440 - ரூபா 4,99,560.

2016.01.01 ஆந் திகதி முதல் 2020.01.01 ஆந் திகதிவரை சம்பளம் பொது நிர்வாக சுற்றுநிருப இலக்கம் 3-2016 இன் பட்டோலை II இன் பிரகாரம் வழங்கப்படும். மேலும் 2020.01.01 ஆந் திகதி முதல் முழுமையான சம்பள அளவுத்திட்டம் மேற்குறிப்பிட்டவாறு அமையும்.

மேலும், இவ்வுத்தியோகத்தர்கள் 2013.01.07 ஆந் திகதிய பொலிஸ் மா அதிபர் சுற்றுநிருப இலக்கம் 2416/ 2013 இன் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவராவர். மேற்குறிப்பிட்ட சம்பளத்திற்கு மேலதிகமாக கீழ்வரும் கொடுப்பனவுகளை மாதம்தோறும் பெறுவதற்கும் உரித்துடையவராவர்.

(அ) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு : 7,800 ரூபா ;
(ஆ) ஊக்குவிப்புக் கொடுப்பனவு : 1,500 ரூபா ;
(இ) சீருடைகளைச் சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு 250 ரூபா ;
(ஈ) மாதாந்த சம்பளத்தில் கொடுப்பனவு (1/ 4 கொடுப்பனவு) : 3,570 ரூபா ;
(உ) கடினக் கொடுப்பனவு : 2,000 ரூபா
(ஊ) இணைந்த கொடுப்பனவுகள் : 10,500 ரூபா (350 X 30 விசேட கொடுப்பனவுகள் வழங்கும் பிரதேசங்கள்) ;
(எ) இணைந்த கொடுப்பனவுகள் : 8,400 ரூபா (350 X 24 விசேட கொடுப்பனவுகள் வழங்காத பிரதேசங்கள்) ;

**இந்த கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக :**

(அ) இலவச போக்குவரத்து வசதிகள் ;
(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளிநாடாக இருப்பினும் வைத்திய வசதிகள் பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும் ;
(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;
(ஈ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான வசதிகள் வழங்கப்படும் ;
(உ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகளுடன், கடினமான வேலைகளுக்காகவும் அத்துடன் திறமையாக கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும் ;
(ஊ) விசேட அதிரடிப்படையின் அடிப்படைப் பயிற்சியை முடித்து விசேட அதிரடிப் படையில் சேவையில் ஈடுபடும் காலப்பகுதியில் மாத்திரம் விசேட அதிரடிப்படையின் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் விசேட கொடுப்பனவுகளைப் பெறுவதற்கான உரிமையுண்டு.

4. **தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) ***வயதெல்லை.***- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியில் 19-26 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) ***கல்வித் தகைமைகள்.***- க. பொ. த. (சா.தர) பரீட்சையில் கணிதம்/ தாய்மொழி உட்பட இரண்டு அமர்வுகளிற்கு மேற்படாமல் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரண்டு அமர்வுகள் பரீட்சைக்குத் தோற்றிய

விண்ணப்பதாரர்கள் முதலாவது அமர்வில் ஒரே முறையில் 5 பாடங்களில் கணிதம்/ தாய்மொழி இரண்டு பாடங்களில் அல்லது ஒன்றில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1**.- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக் கையை வகைப்படுத்தும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க. பொ. த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2**.- க.பொ. த. (சா.தர) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராக கருதப்படும்.

**குறிப்பு 3**.- விருப்பத்துக்குரிய தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத்திட்டத்துக்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்பட மாட்டாது.

(இ) **பௌதிகத் தகைமைகள்** :

* உயரம் : 5 அடி 3 அங்குலம் (ஆகக் குறைந்தது)

* மார்பு : 30 அங்குலம் ஆகக் குறைந்தது (மூச்சு விட்ட நிலையில்)

**குறிப்பு**.- சிறந்த விளையாட்டுத் திறமையுடன் தேசிய விளையாட்டுக் குழாத்திலிருந்து தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப் பதாரர் ஒருவரின் பௌதிகத் தகைமைகள் சற்று குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிபின்படி தகைமை பெறுவர்.

(ஈ) **தொழில் தகைமைகள்** :

(i) இலகு வாகனங்களை அல்லது கனரக வாகனங்களை ஓட்டும் திறமை இருப்பதற்கான சான்றிதழ் இருத்தல்.

(ii) மேற்குறிப்பிட்ட சான்றிதழைப் பெற்றபின் ஆகக் குறைந்தது ஒரு வருடத்திற்கு மோட்டார் வாகனம் செலுத்திய அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- வாகனம் சம்பந்தமாக தொழில்நுட்ப அறிவு, வாகனம் திருத்திய அனுபவம் அத்துடன் நெடுங் காலமாக வாகனம் செலுத்திய அனுபவம் இருந்தால் அவ்விண்ணப்பதாரருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

* வாகனத்தை திறமையுடன் செலுத்து வதற்கு தேவைப்படும் உடல் அவயங் களின் இயக்கத்திற்கு தடையாக இருக்கும் ஏதாவது அங்கவீன அல்லது பிற உடல் குறைபாடுகளை உடைய விண்ணப்பதாரர் சேவைக்கு பொருத்தமானவர் எனும் வைத்தியசாலை சான்றிதழ் பெற்றிருப் பினும் அவர் இப்பதவிக்கு தகுதி அற்றவராகக் கருதப்படுவர்.

* அடிப்படைத் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர் வாகனம் செலுத்துவது மற்றும் பராமரிப்பு தொடர்பில் பரீட்சிக்கப்படுவர். அதுபோலவே வீதிகள் போக்குவரத்து சைகைகள் தொடர்பாக விண்ணப்பதாரர் பெற்றுள்ள அறிவு ஒவ்வொரு விண் ணப்பதாரரும் வாகனம் செலுத்துவதற்கு திறமை பெற்றுள்ள வாகனங்களும் இயந்திர தொழில்நுட்பம் தொடர்பான அடிப்படை அறிவு ஆகியனவும் பரீட்சிக்கப்படும்.

(உ) **பார்வை தொடர்பான தேவை**.- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 க்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரண மாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் சேவைக்கு தகைமை அற்றவராவார்.

(ஊ) **பிற தகைமைகள்**.- விண்ணப்பதாரர் திருமண மாகாதவராக இருத்தல் வேண்டும் (விவாகரத்துப் பெற்றவர்கள் விவாகமானவர்களாகக் கருதப்படுவர்.)

5. **ஆட்சேர்ப்பு முறை** :

* விண்ணப்பங்களின்படி தகைமையைப் பெறும் விண்ணப்பதாரிகள் இலங்கைப் பொலிஸினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகைமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற்தகுதிப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.-

**உடற் தகுதிப் பரீட்சை**

1000 மீற்றர் ஓட்டம் - 04 நிமிடங்கள்.

* உடற் தகுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் படுவர். நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் இறுதி தொழில்சார் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

*6.* ***தொழில்சார் பரீட்சை - பொலிஸ் கொஸ்தாபல் சாரதிப் பதவி*** :

6.1 இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரின் பணிப்புரையின் கீழ் பொலிஸ் சாரதி பாடசாலையின் உதவிப் பணிப்பாளரினால் தொழில்சார் பரீட்சை நடாத்தப்படும்.

6.2 தொழில்சார் பரீட்சைக்கு 100 புள்ளிகள் ஒதுக்கப் பட்டுள்ளது. தொழில்சார் பரீட்சை பின்வருமாறு நடாத்தப்படும் :-

| | | |
|---|---|---|
| (அ) | வாகனம் செலுத்தும் தகுதி | - 50 புள்ளிகள் |
| (ஆ) | வீதிச்சட்ட அறிவுரை | - 25 புள்ளிகள் |
| (இ) | வாகனப் பராமரிப்பு மற்றும் சிறிய திருத்த வேலைகள் தொடர்பான அறிவு | - 25 புள்ளிகள் |

6.3 ***தொழில்சார் பரீட்சை***.- வாகனம் செலுத்தும் தகுதிப் பரீட்சைக்கு ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 50 புள்ளிகளில் ஆகக்குறைந்தது 25 புள்ளிகளும், வீதிச்சட்ட அறிவுரை புத்தகம் தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 25 புள்ளிகளில் ஆகக்குறைந்தது 12.5 புள்ளிகளும், வாகனப் பராமரிப்பும் சிறிய திருத்த வேலைகள் தொடர்பான அறிவுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 25 புள்ளிகளில் ஆகக்குறைந்தது 12.5 புள்ளிகளாவது பெற்று முழுப்புள்ளிகள் 100 இல் ஆகக் குறைந்தது 50 புள்ளிகளாவது பெறும் விண்ணப்பதாரர்கள் தொழில்சார் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாக கருதப்பட்டு மருத்துவப் பரிசோதனைக்கு அழைக்கப்படுவர்.

**குறிப்பு**.- சேர்க்கப்பட்ட பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பயிலுநர் காலப்பகுதிக்குள் கனரக வாகனங்களை ஓட்டுவதற்கான தகைமையைப் பெற பொலிஸ் வித்தியாலயத்தில் நடைபெறும் கனரக வாகன ஓட்டும் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

7. **மருத்துவப் பரிசோதனை** :

* விண்ணப்பதாரர் தனது நியமனத்தைப் பெற முன்னர் மருத்துவப் பரிசோதனையில் சித்தியடைதல் வேண்டும். மருத்துவப் பரிசோதனையானது ஆட் சேர்ப்புச் செயற்பாட்டில் ஒரு அங்கம் மட்டுமே ஆகும். மருத்துவப் பரிசோதனையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் தற்போது உள்ள வெற்றிடங் களின் எண்ணிக்கை, முன்னுரிமை மற்றும் அவர்களது திறமை அடிப்படையில் அமைந்த பட்டியலின்படி தெரிவுசெய்யப்படுவர். மருத்துவப் பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

*8.* ***பின்னணி விசாரணைகள்***.- (அ) விண்ணப்பதாரியின் நன்நடத்தையும் அவரின் நெருங்கிய உறவினர்கள், நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். பின்னணி விசாரணைகளில் ஏதேனும் பாதகமான காரணிகள் இருந்தால் அவ் விண்ணப்பதாரர்கள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரர் பொய்யான தகவல்கள் வழங் குவது அல்லது அதை மூடி மறைப்பது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின்னர் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவார்.

*9.* ***அரச கரும மொழிக் கொள்கையை அமுல் படுத்தல்*** :

- பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் 2007.04.28 ஆந் திகதி வெளியிடப் பட்ட 07/ 2007ஆம் இலக்க சுற்று நிருபத்தின் பிரகாரம், 2007.01.01 ஆந் திகதியிலிருந்து அரச சேவைக்கு/ மாகாண அரச சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரசகரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழித் தேர்ச்சியை சேவையில் இணைந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் பெறல் வேண்டும்.
- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்பட்ட அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இரண்டாம் மட்ட மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.
- நியமனத் திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் உரிய இரண்டாம் மொழித் தேர்ச்சியைப் பெறாத உத்தியோகத்தர்களின் சம்பள ஏற்றங்கள் நிறுத்தி வைக்கப்படும்.

*10.* **நியமனக் கொள்கைகள்**.- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள்/ தபுதாரர்/ அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

*11.* **சேவை நிபந்தனைகள்** :

(அ) நியமனம் 3 ஆண்டு காலப் பயிலுநர் அடிப்படையில் இருக்கும்.

(ஆ)தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரசகரும மொழிக் கொள்கையை அமுல்படுத்தவும் ஏற்கனவே விதிக்கப் பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் விதிக்கப்படக்கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக் விதிக்கோவையின் I ஆம், II ஆம் தொகுதிகளிலான ஏற்பாடுகளுக்கும் நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்படல் வேண்டும்.

(ஈ) பதவி உறுதிப்படுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் இலங்கைப் பொலிஸினால் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்தியெய்தல் வேண்டும். குறித்த பரீட்சைகளில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு இடமுண்டு.

(உ) நியமனம்பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொலிஸ் மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள். எனினும், 1973.02.28 ஆந் திகதிய மற்றும் 41 ஆம் இலக்கம் கொண்ட பொலிஸ் வர்த்தமானியின் பகுதி II இன் பிரகாரமும் மற்றும் 2006.10.19 ஆந் திகதிய மற்றும் 1952/ 2006 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்று நிருபத்தின் பிரகாரமும் 2007.08.09 ஆந் திகதிய திருத்தம் செய்யப்பட்ட அச்சுற்று நிருபத்தின் பிரகாரமும் திருமணம் செய்வதற்கான விசேட காரணங்களைத் தெரிவித்து பொலிஸ் மா அதிபரின் அனுமதியுடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட பயிலுநர் நிலையில் இலங்கைப் பொலிஸில் பணியாற்ற வேண்டியதுடன் பயிலுநர் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களைச் செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட வேண்டும். அப்பெறுமதி இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகலை அங்கீகரிப்பது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதிகள் பயிற்சியினை ஆரம்பித்தவுடன் உடனடியாக, 1693/ 2003 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்திற்கு இணங்க பொலிஸ் ஒழுக்காற்று கோவையினைப் பின்பற்றுவதாக சத்தியப்பிரமாணம்/ உறுதிசெய்தல் வேண்டும்.

(ஏ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதிகள் பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்த வுடன் உடனடியாகப் பொலிஸ் மா அதிபரின் 1804/ 2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அபிமானம் மிக்க அரச சேவைக்கான அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக சுய உறுதி செய்தல் வேண்டும்.

(ஒ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதிகள் தமது பதவியில் உறுதிப்படுத்திய பின் இலங்கைப் பொலிஸில் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடைய வராவார்.

12. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (II அ) வின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரச சேவை பதவிகளுக்கு நியமனம் செய்வதற்குரிய பொது நிபந்தனைகள் செல்லுபடியானதாகும்.

(ஆ)1990.03.10 ஆந் திகதிய மற்றும் பதவிகளிற்கு நியமனம் செய்வதற்குரிய 15/ 90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

13. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும். (மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணநலச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது);

(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது ஏனைய புறக்கிருந்த செயற்பாடுகள் பற்றிய சான்றிதழ்கள்;

(உ) தொழில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின்) ;

(ஊ) தேசிய அடையாள அட்டையின் நிழற்படப் பிரதி ;

(எ) சாரதி அனுமதிப்பத்திரத்தின் நிழற்படப் பிரதி.

14. (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ)விண்ணப்பதாரர் 11" x 8" அளவிலான தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தமது சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தி சான்றிதழ்களது பிரதிகளுடன் இரண்டாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் எந்த ஒரு உத்தியோகத்தரிடமும் விண்ணப்பங்களை பிரத்தியேகமாக கையளித்தலாகாது.

15. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பான விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்பட மாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

பூஜித் ஜயசுந்தர,
பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பொலிஸ்**

பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவி -
விசேட அதிரடிப்படை

(அலுவலக உபயோகத்திற்கு)

1. (அ)முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழ்களில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.
(ஆ)பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.
(இ) விண்ணப்பதாரரின் பதவி :-----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :-----.
(தேசிய ஆள் அடையாள அட்டையின் பிரதி இணைக்கப் படல் வேண்டும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்துக்குரிய பொலிஸ் நிலையம் :----.
மாகாணம் :-----.

5. (அ)தற்போதைய முகவரி :-----.
(ஆ)தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
(இ) நிரந்தர முகவரி :-----.
(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
(உ) நிரந்தர முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு :-----. பிரதேச செயலகம் :-----.
(ஊ) தொலைபேசி இலக்கம் (வதிவிடம்) :-----, கையடக்க தொலைபேசி இலக்கம் :-----.

6. (அ)தேசிய இனம் :-----.

(ஆ)நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----

(இ) நீங்கள் வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசையானால் பின்வருபவர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரின் தந்தை வழி பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் :-----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----; மார்பு : அங்குலம் :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. (அ)வாகனம் ஓட்டும் அனுமதிப்பத்திர இலக்கம் :-----.
(ஆ)வாகனம் ஓட்டும் அனுமதிப்பத்திரம் பெற்ற திகதி : -----.
(இ) திறமைபெற்ற வாகனங்களின் வகுப்புகள் :-----.
(சான்றிதழின் பிரதிகளை இணைக்கவும்.)

11. மேலதிகத் தகைமைகள் உண்டா ? (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

12. திருமணம் ஆனவரா/ திருமணம் ஆகாதவரா ? :-----.

13. (அ)தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ)நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? : -----.

14. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/ தகைமைகள் உண்டா ? :-----.

15. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இரு நபர்களின் பெயர் முகவரிகளைக் குறிப்பிடுக :-

(அ)-----.
(ஆ)-----.

16. நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையில் சேவை செய்துள்ளீரா ? (ஆம் எனின், அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக) :-----.

17. (அ)நீங்கள் ஆயுதப்படை சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின், குறிப்பிட்ட ஆயுதப்படை சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ)நீங்கள் ஆயுதப்படையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின், அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும் :-----.

18. (அ)நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின், குறிப்பிட்ட படைத் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ)நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின், அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

19. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீரா ? அல்லது தண்டனை பெற்றுள்ளீரா? அவ்வாறாயின் விபரம் தருக. :-----.

20. உங்கள் உறவினர்கள் எவரேனும் தவறு தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அவ்வாறாயின் ஏதேனும் குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனரா ? அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா ? (அவ்வாறாயின் விபரம் தருக) : -----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவை யென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத் திலும் பொலிஸ் திணைக்கள சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

21. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (தேவையேற்படின்) :

இந்த விண்ணப்பதாரி ......................................... . அவர்கள் இத்திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவையாற்றுபவர் எனவும் அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் அவரை இச்சேவையில் இருந்து விடுவிக்க முடியும் எனவும் தெரிவிக்கிறேன்.

................,
(திணைக்களத் தலைவரின் கையொப்பம்).
பதவி முத்திரை இடப்பட வேண்டும்.

பதவி :----.
திகதி :-----.

2-460/ 4

---

## இலங்கை நீதிமன்ற புத்தகக் கட்டுநர் சேவையின் III ஆம் தரத்திற்குரிய பதவிக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான ஆட்சேர்ப்பு - 2017

இலங்கை நீதிமன்ற புத்தகக் கட்டுநர் சேவையின் III ஆம் தரத்திற்குரிய புத்தகக் கட்டுநர் பதவிக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக கீழ்வரும் தகைமைகளைக் கொண்ட ஆட்களை நேர்முகத் தேர்வின் பெறுபேறுகளுக்கு அமைவாக சேவையில் இணைத்துக் கொள்வதற்கு நீதிச்சேவைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

1. **தகைமைகள் :**

(i) கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம் மொழி மற்றும் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டியதுடன் அவற்றில் 3 பாடங்களுக்கு திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டும். எவ்வாறெனினும் ஒரே அமர்வில் 5 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(ii) 17 வயதிற்குக் குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.

2. மாதமொன்றுக்கு ரூ. 25,250 - 10 x 270 - 10 x 300 - 10 x 330 - 12 x 350 - ரூ. 38,450 எனும் வேதனத்திட்டம் இப்பதவிக்குரியதாகும். (01.01.2020 ஆந் திகதி வரை அ. நி. சு. 03/ 2016 அட்டவணை 2 இற்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.)

3. நேர்முகத் தேர்வின் பின்னர் சேவையில் இணைத்துக்கொள்வதற்காகத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் சேவைத் தேவைப்பாட்டிற்கு அமைவாக தீவின் எப்பாகத்திலும் வெற்றிடங்கள் நிலவும் நீதிமன்றங்களில் பணியில் அமர்த்தப்படலாம். சேவைத் தேவைப்பாட்டிற்கு அமைவாகவன்றி வேறெந்த காரணங்களுக்காகவும் உரிய காலப்பகுதி நிறைவடைவதற்கு முன்னர் இடமாற்றம் வழங்குமாறு விடுக்கப்படும் கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

4. இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான மாதிரி விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இவ்வறிவித்தலுக்கு அமைவாக 11 1/ 2" x 8 1/ 2" அளவிலான கடதாசியில் விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக மாத்திரமே விண்ணப்பதாரிகளால் தங்களது விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

5. தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள, மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப்படிவங்களைத் திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்ப வேண்டும்.

6. மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப்படிவங்களை 03.03.2017 ஆந் திகதிக்கு முன்னர் "செயலாளர், நீதிச் சேவைகள் ஆணைக்குழுச் செயலகம், கொழும்பு 12" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவங்களைக் கொண்ட கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "நீதிமன்ற புத்தகக் கட்டுநர் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்த்துக்கொள்ளல்" எனக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

7. உரிய தகைமைகளைக் கொண்டிராத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

8. விண்ணப்பப்படிவங்கள் தொடர்பாக எழக்கூடிய சிக்கல்களின்போது நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

பிரதீப் ஜயதிலக,
மேல் நீதிமன்ற நீதிபதி/
பதில் கடமையாற்றும் செயலாளர்,
நீதிச்சேவைகள் ஆணைக்குழு.

நீதிச்சேவைகள் ஆணைக்குழுச் செயலகம்,
கொழும்பு 12,
2017, சனவரி 25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நீதிமன்ற புத்தகக் கட்டுநர் சேவையின் III ஆம் தரத்திற்குரிய பதவிக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான ஆட்சேர்ப்பு - 2017**

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழ்) திரு./திருமதி/செல்வி :----.
   (ii) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலம்) :----.

2. முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (தமிழ்) :----

3. (i) பிறந்த திகதி :----.
   (ii) 2017.03.03 ஆந் திகதியன்று வயது :
   வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

4. (i) நிரந்தர முகவரி :----.
   (ii) மாவட்டம் :----.

5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

6. தொலைபேசி இலக்கம் :
   (i) நிலையான :----.
   (ii) கைத்தொலைபேசி :----.

7. கல்வித் தகைமைகள் - க. பொ. த. (சா. த.) :

முதல் அமர்வு :
சுட்டெண் :----.
வருடம் :----.

| இலக்கம் | விடயம் | சித்தி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

இரண்டாம் அமர்வு :
சுட்டெண் :----.
வருடம் :----.

| இலக்கம் | விடயம் | சித்தி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

8. வேறு கல்வித் தகைமைகள் :----.

9. வேறு தொழில் தகைமைகள் இருப்பின் :----.

10. தற்போது தொழிலில் ஈடுபட்டிருப்பின் :

(i) பதவி மற்றும் தரம் :----.

(ii) பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளீர்களா ? :----.

(iii) திணைக்களம் மற்றும் தற்போதைய சேவை நிலையம் :----.

11. நீதிமன்றம் ஒன்றினால் ஏதேனுமொரு தவறொன்றுக்கு நீங்கள் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ? ஆம் எனின், அது பற்றிய விபரங்களைச் சுருக்கமாகக் குறிப்பிடவும் :----.

மேலே என்னால் வழங்கப்பட்டுள்ள சகல தகவல்களும் உண்மையானவை மற்றும் சரியானவை என இத்துடன் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திணைக்களத் தலைவரின் விதந்துரை

...................................... இல் சேவையாற்றும் திரு./ திருமதி/ செல்வி ...................................... என்பவருக்கு இலங்கை நீதிமன்ற புத்தகக் கட்டுநர் சேவையின் III ஆம் தரத்தின் பதவிக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான கல்வித் தகைமைகள் உள்ளது எனவும், அவர் அப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் என்பதனையும் தெரிவித்து இவ்விண்ணப்பப்படிவத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
முத்திரை :

திகதி :----.

2-527

---

## நீதிச்சேவை ஆணைக்குழு

**பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களில் நிலவும் “காதி” பதவி வெற்றிடங்களுக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்காக முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) இன்கீழ் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

கீழே குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம் :

விண்ணப்பதாரர் முஸ்லிம் சமயத்தைச் சார்ந்த ஆணாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றுள்ள பட்டதாரி ஒருவராக அல்லது முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் சான்றிதழ் பெற்றுள்ள மௌலவி ஒருவராக அல்லது கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்படும் அல்-ஆலிம் சான்றிதழ் பெற்றுள்ள ஒருவராக அல்லது சட்டத்தரணி ஒருவராக அல்லது அதற்குச் சமனான தொழில்சார் தகைமையுடைய ஒருவராக அல்லது ஓய்வுபெற்ற பதவிநிலை தரத்திலான உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் இதற்கு விண்ணப்பிக்கத் தகைமையற்றவர்களாவர்.

விண்ணப்பதாரர் இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றி ஒழுகுபவராகவும், 40 வயதிற்கு மேற்பட்டவராகவும், நல்ல தேகாரோக்கியம் உள்ளவராகவும், நல்லொழுக்கமுள்ளவராகவும் இருக்கவேண்டியதோடு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் மற்றும் விசேடமாக முஸ்லிம் சட்டம் பற்றிய நல்ல அறிவுடையவராகவும் சமூகத்தில் நல்ல வரவேற்பும் மதிப்பும் உள்ளவராகவும் விவாகமானவராகவும் இருத்தல் வேண்டும்.

தெரிவுசெய்யப்படும் அபேட்சகர் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்படுகின்ற கால எல்லைக்கு நியமனம் செய்யப்படுவர்.

காதியாக நியமிக்கப்படுபவர் அப்பிரதேசத்திற்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருப்பது சட்ட ரீதியான அவசியமாகும்.

காதி ஒருவருக்கு 7,500 ரூபா மாதாந்தக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக உதவியாளர் சேவை, எழுதுகருவிகள் மற்றும் அஞ்சல் செலவுக்காக மாதாந்தம் 6,250 ரூபா கொடுப்பனவொன்றும் வழங்கப்படும்.

கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய, விண்ணப்பப்படிவங்கள் 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 17 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் என்னை வந்தடையுமாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "காதி" எனக் குறிப்பிடல் வேண்டும். ஆவணங்களின் மூலப்பிரதிகள் விண்ணப்பத்துடன் அனுப்பப்படலாகாது.

ஆனந்தி கனகரத்னம்,
சிரேஷ்ட உதவிச் செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
த. பெ. இல. 573,
கொழும்பு 12,
2017, சனவரி 18.

**அட்டவணை**

1. **கம்பளை (உடபலாத)** - கண்டி மாவட்டத்தின் கம்பளை (உடபலாத) நீதிப்பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விகாரத்துச்சட்டத்தின் (அத்தியாயம் 115) படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**1965 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கம் மற்றும் 1969 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான முஸ்லிம் விவாக, விவாகநீக்கச் சட்டத்தின் (அத்தியாயம் 115) கீழ் காதிப் பதவி**

காதிப் பிரிவு :

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :

(உதாரணம் : இப்ராஹிம் ஏ. எல். எம்.)

2. முழுப்பெயர் :

(உதாரணம் : ஆதம் லெப்பே மொஹமட் இப்ராஹிம்)

3. நிலையான வசிப்பிடம் :

4. அஞ்சல் முகவரி :

5. பிறந்த திகதி : திகதி: மாதம் : வருடம் :

6. வயது :

7. தேசிய இனம் :

8. சமயம் :

9. தே. அ. அ. இல. :

10. தொலைபேசி இல. :

11. கல்வித் தகைமைகள் :
1. -----------------------------------------------
2. -----------------------------------------------
3. -----------------------------------------------
4. -----------------------------------------------
5. -----------------------------------------------

12. தொழில் தகைமைகள் :
1. -----------------------------------------------
2. -----------------------------------------------
3. -----------------------------------------------
4. -----------------------------------------------
5. -----------------------------------------------

13. விண்ணப்பதாரி எழுத, வாசிக்கத் தெரிந்த மொழிகள் :

14. முஸ்லிம் சட்டம் பற்றிய அறிவுண்டா ? :

ஆம் இல்லை

15. விவாகமானவரா ? :

ஆம் இல்லை

16. மனைவி உயிருடன் இருக்கின்றாரா?

ஆம் இல்லை

18. முன்னைய, தற்போதைய தொழில்கள் (திகதி விபரங்களுடன்) :

| முதல் | வரை | தொழில் | இடம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

18. விண்ணப்பதாரிக்குரிய சொத்துக்களின் பெறுமதி :

| ரூ. | |
|---|---|

19. மாதாந்த வருமானம் :

| ரூ. | |
|---|---|

20. கடன்கள் இருப்பின் தொகை விபரம் :

| ரூ. | |
|---|---|

21. சென்ற பத்து (10) வருட காலப்பகுதியினுள் நீர் முனைப் பாக அரசியலில் ஈடுபட்டிருந்தீரா ? :

| ஆம் | | இல்லை | |
|---|---|---|---|

22. நீர் வருமானவரி செலுத்துமொருவரா ? :

| ஆம் | | இல்லை | |
|---|---|---|---|

23. உமக்கெதிராக நீதிமன்றமொன்றில் குற்றவியல் வழக்கே தேனும் உண்டா? இருக்கிறதா ? :

| ஆம் | | இல்லை | |
|---|---|---|---|

24. நீதிமன்றங்களில் தண்டனை பெற்றிருப்பின் அதுபற்றிய விபரங்கள் :

| |
|---|
| |

25. உம்மைப் பற்றி நன்கறிந்துள்ள, உம்மைப் பற்றிய தனிப்பட்ட விபரங்கள் பெறக்கூடியவர்கள் :

| | |
|---|---|
| பெயர் : | பெயர் : |
| முகவரி : | முகவரி : |
| தொலைபேசி இல. : | தொலைபேசி இல. : |
| தொழில் : | தொழில் : |
| உம்மையறிந்துள்ள காலப்பகுதி : | உம்மையறிந்துள்ள காலப்பகுதி : |

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிமொழிகின்றேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- அனைத்து சான்றிதழ்களினதும் பிரதிகளை இத்தோடு இணைக்கவும்.

2-532

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### கட்டடத் திணைக்களம்

இலங்கை தொழில்நுட்பச் சேவையின் வரைஞர் (பயிற்றுவித்தல் தரம்)

கட்டடத் திணைக்களத்தின் மேற்படி பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து கட்டடத் திணைக்களத்தின் கட்டடப் பணிப்பாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வரைஞர் (பயிற்றுவித்தல் தரம்) தலைமை அலுவலகத்திற்கு இணைப்புச் செய்யப்படுவார்கள்.

2. இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய ஏ4 அளவான தாளின் இருபக்கங்களையும் பயன்படுத்தி தயார் செய்து கொண்ட விண்ணப்பப்படிவத்தை 2017.03.09 ஆம் திகதிக்கு அல்லது அத்திகதிக்கு முன்னர் "பணிப்பாளர் நாயகம், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம், மலலசேகர மாவத்தை, கொழும்பு 07" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “கட்டடத் திணைக்களத்தின், “இலங்கை தொழில்நுட்பச் சேவையின் வரைஞர் (பயிற்றுவித்தல் தரம்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை” என தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். தாமதித்துக் கிடைக்கின்ற, தெளிவற்ற மற்றும் முறையாக பூர்த்தி செய்யப்படாதுள்ள விண்ணப்பப் படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

3. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்:**

3.1 இந்தப் பதவி நிரந்தரமானது. உங்களுக்கு உரித்தான ஓய்வூதியம் தொடர்பில் அரசாங்கத்தால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும்.

3.2 அரசாங்க சேவையின் நியமனங்கள் தொடர்பான தாபன விதிக் கோவையின் 11 ஆம் அத்தியாயத்தின் 10 – 12 வரையான பிரிவுகளின் நடைமுறை விதிகளும் இதற்கு ஏற்புடையனவாகும்.

3.3 தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களக் கட்டளைகளுக்கும்,

காலத்திற்குக் காலம் அரசாங்கத்தினால் வெளியிடப் படுகின்ற வேறு ஒழுங்கு விதிகள் மற்றும் கட்டளை களுக்கும் இணங்கியொழுக வேண்டும்.

**4. பொதுவான தகைமைகள் :**

4.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

4.2 சிறந்த நன்னடத்தையுடையவராகவும், நல்ல தேகாரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும்.

4.3 ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற அலுவலர்கள் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்ற வேண்டும்.

4.4 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதிக்கு 18 வயதிற்குக் குறையாதவராகவும், 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடைய தாகாது.)

**5. சகல பதவிகளுக்கும் தேவையான கல்வித் தகைமைகள் :**

5.1 கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சா. த.) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் இன்னுமொரு பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் (6) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

5.2 விஞ்ஞானம்/ கணிதம்/ தொழில்நுட்பவியல் துறைகளில் துறைசார் பாடங்கள் இரண்டுடன் பொதுத் தராதரப் பத்திர (உ. த.) பரீட்சையில் (பொது அறிவுப் பரீட்சை தவிர) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (பழைய பாட விதானத்தின் கீழ் 3 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருப்பது போதுமானதாகும்.)

**6. தொழில்சார் தகைமைகள் :**

6.1 இலங்கை தொழில்நுட்பச் சேவையைச் சேர்ந்த வரைஞர் (பயிற்றுவித்தல் தரம்)
மேலே 5 இன் கல்வித் தகைமைகளுக்கு மேலதிகமாக குறித்த துறை தொடர்பான பின்வரும் தொழில்சார் தகைமைகளில் ஒன்றைப் பூர்த்தி செய்துள்ளதுடன், விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியில் உரிய சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும் :

(i) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்பக் கல்லூரியொன்றில் மேற்படி பதவிக்கு ஏற்புடைய துறையில் பாடநெறியொன்றை வெற்றிகரமாகக் கற்று தேசிய தொழில்நுட்பச் சான்றிதழைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(ii) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் வரைஞர் கலை பற்றிய ஒரு வருட முழுநேரப் பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்து உரிய சான்றிதழைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(iii) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் மேற்படி பதவிக்கு ஏற்புடைய துறையில் கைத்தொழில் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய சான்றிதழ் பாடநெறியை வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளதுடன், குறித்த சான்றிதழைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(vii) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப் பட்டுள்ள தொழில்நுட்பச் சான்றிதழ்களை வழங்கியுள்ள நிறுவனங்களிடம் வினவி கருத்துக்கள் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பத் தகைமைகளுக்கு சகல வகையிலும் சமமானவை யென மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப் படுகின்ற வேறு தொழில்நுட்பத் தகைமை களைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு**.- மேலே 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகள் மற்றும் 6.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள வரைஞருக்கு (பயிற்றுவித்தல் தரம்) ஏற்புடைய குறித்த தொழில்சார் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்கள், சேவைக்குரிய பாடவிதானங்களுக்கு அமைய பெற்றுக்கொள்ளும் ஒரு வருட கோட்பாட்டு ரீதியான மற்றும் செயல் ரீதியான பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்து, குறித்த பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த சம்பள அளவுத்திட்டத்தின் ஆரம்ப நிலையில் வைக்கப்படுவார்கள்.

**7. தெரிவுசெய்யும் அடிப்படை :**

7.1 எழுத்து மூலமான பரீட்சைக்குரிய நிபந்தனைகள்.- இதற்கான எழுத்துமூலப் பரீட்சை கட்டடத் திணைக்களம் சார்பாக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன், அவர் அறிவிக்கும் தினத்தில் பரீட்சை நடாத்தப்படும். அவர் விதிக்கின்ற சட்டங்கள், விதிகளுக்கு பரீட்சார்த்திகள் உட்படுதல் வேண்டும் ;

7.2 தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்கள் எழுத்து மூலமான பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்பதுடன், நேர்முகப் பரீட்சையில் தோற்றுவதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும், ஆகக்குறைந்தது 40% ஆன புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும் ;

மேற்படி பரீட்சையில் புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட ஒழுங்குவரிசையின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகுதிவாய்ந்தவர்கள் குறித்த புள்ளிகளின் ஒழுங்குவரிசையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்படுவதில்லை என்பதுடன் தகைமைகள் மாத்திரம் பரிசீலனை செய்யப்படும்.

7.3 எழுத்து மூலமான பரீட்சைக்கு ஏற்புடைய விடயங்கள் பின்வருமாறாகும் :

| பாடங்கள் | நேரம் | உச்ச புள்ளி களின் எண் ணிக்கை | சித்தியடை வதற்குப் பெற வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. உளச் சார்புப் பரீட்சை | 1 மணித்தி யாலம் | 100 | 40 |
| 2. விடய ரீதியான தொழில் நுட்பப் பரீட்சை | 3 மணித்தி யாலம் | 100 | 40 |

| வினாத் தாளின் பெயர் | பாடவிதானம் |
|---|---|
| 1. உளச் சார்புப் பரீட்சை | புரிந்து கொள்ளும் சக்தி, தர்க்க ரீதியான அறிவு, சரியாக தீர்மானம் மேற்கொள்ளும் ஆற்றல், எண்கள் மற்றும் கணித சிக்கல்களைத் தீர்க்கும் ஆற்றல், மொழித் தொடர்கள், அட்டவணை, படம், குறிப்பு, வரைபடத்தைப் பயன் படுத்தல். |
| 2. விடய ரீதியான தொழில் நுட்பப் பரீட்சை | உகந்த அளவுத் திட்டத்திற்கு அமைய கட்டட வரைபடங்களை வரைதல் மற்றும் குறிப்புகளைத் தயார் செய்யும் ஆற்றல். |

7.4 எழுத்து மூலப் பரீட்சை சிங்களம்/ தமிழ் ஆகிய இரண்டு மொழிகள் மூலமும் நடாத்தப்படும்.

8. **ஆட்சேர்ப்புச் செய்தல்**.- மேலே 5 மற்றும் 6 இன் கீழ் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதுடன், எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள விண்ணப்பதாரர்கள் இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்/ மின்/ பொறிமுறை) மற்றும் வரைஞர் (பயிற்றுவித்தல் தரம்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்.

9. **சம்பள அளவுத்திட்டம்**.- பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 3/ 2016 இன் உப அட்டவணை V இன்கீழ்,

இலங்கை தொழில்நுட்பச் சேவையின் வரைஞர் (பயிற்றுவித்தல் தரம்)
ரூபா 15,924 (சீராக்கல் படி ரூபா 9,914).

10. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் 1,000 ரூபா ஆகும். விண்ணப்பதாரர்கள் திருப்பிச் செலுத்தப்படாத 1,000 ரூபா பரீட்சைக் கட்டணத்தை நாடு முழுவதிலும் அமைந்துள்ள எந்தவொரு தபால் அலுவலகத்தின் மூலமும் (உப தபால் அலுவலகங்கள் தவிர) "SLIDA" கணக்கிற்கு செலுத்த வேண்டும் என்பதுடன், இந்தக் கொடுப்பனவு தொடர்பாக வழங்கப்படுகின்ற ரசீதின் இலக்கத்தை பரீட்சை விண்ணப்பப்படிவத்தின் 12 ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடுதல் வேண்டும்.

குறித்த தபால் அலுவலகத்தில் "SLIDA" கணக்கிற்கு கொடுப்பனவைச் செலுத்துவதற்கான படிவத்தை நிரப்பும் போது, பணத்தைப் பெற்றுக் கொள்பவராக "SLIDA" என்றும், பணம் பெற்றுக்கொள்பவரின் முகவரி எனும் இடத்தில் உங்களுக்குரிய பரீட்சையின் குறியீட்டுப் பெயரையும் குறிப்பிடுக. (குறியீட்டுப் பெயர்கள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன.)

| | பரீட்சையின் பெயர் | குறியீட்டுப் பெயர் |
|---|---|---|
| 1 | இலங்கை தொழில்நுட்பச் சேவையின் வரைஞர் (பயிற்றுவித்தல் தரம்) | TOd |

மேலும், கணக்கிற்கு பணம் செலுத்தும் போது பணம் அனுப்புபவராக விண்ணப்பதாரரின் பெயரையும், பணம் அனுப்புபவரின் முகவரி எனும் இடத்தில் விண்ணப்பதாரியின் தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கத்தையும், குறிப்பிட்டு விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்தல் வேண்டும்.

11. யாராயினுமொரு விண்ணப்பதாரரின் விண்ணப்பப் படிவத்தில் யாதாயினும் தவறான, பொய்யான கூற்றுக்கள் இருப்பதன் காரணமாக அவர் தகைமையற்றவராக்கப்பட முடியும் என்பதுடன், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் இது பற்றி அறியக்கிடைக்கும் பட்சத்தில் அவர் பதவிநீக்கம் செய்யப்பட முடியும்.

*12.* **கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.** *விண்ணப்பதாரர்கள் தமது கையொப்பத்தை, அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் / ஓய்வுபெற்ற அதிபர், பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பகிரங்க நொத்தாரிசு, முப்படைகளின் ஆணைபெற்ற அலுவலர், அல்லது 2,40,360 ரூபா அல்லது அதற்கு மேலான வருடாந்த சம்பளத்தைப் பெறுகின்ற அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையின் அல்லது நிரந்தர பதவிநிலை அலுவலர் அல்லது நாயக்க தேரர் அல்லது வேறு மதவழிபாட்டுத்தள மொன்றிற்குப் பொறுப்பான மதத் தலைவர் அந்தஸ்தில் உள்ளவராகக் கருதப்படக்கூடிய ஒருவர் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவத்தை நிறுவனத் தலைவரின் ஊடாக அனுப்ப வேண்டும்.*

*இதில் குறிப்பிடப்படாதுள்ள விடயமொன்று தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளும் அலுவலராக கட்டடப் பணிப்பாளர் நாயகம் செயற்படுவார்.*

எம். ஆர். ஜெயசந்திரன்,
கட்டடப் பணிப்பாளர் நாயகம்.

கட்டடத் திணைக்களம்,
'செத்சிறிபாய',
பத்தரமுல்லை,
2017, சனவரி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கட்டடத் திணைக்களம்**

இலங்கை தொழில்நுட்பச் சேவையின் வரைஞர்
(பயிற்றுவித்தல் தரம்)

[ ]
(அலுவலக உபயோகத்திற்கு)

எழுத்துமூலப் பரீட்சைக்குத் தோற்றும் மொழி :
சிங்களம் - S
தமிழ் - T [ ]
(உரிய ஆங்கில எழுத்தைக் கூட்டினுள் எழுதுக.)

1. (i) முழுப் பெயர் :----.
   (ii) முதலெழுத்துக்களுடனான பெயர் (சிங்களம்/தமிழ் மொழியில்) :----.
   (iii) முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) :----.

2. முகவரியும், தொலைபேசி இலக்கமும் :

   (i) அலுவலக முகவரி :----.
   தொலைபேசி இலக்கம் :----.
   (ii) சொந்த முகவரி :----.
   (iii) தொலைபேசி இலக்கம் :----.
   (iv) கையடக்கத் தொலைபேசி இலக்கம் :----.

3. பால் :
   ஆண் - 0
   பெண் - 1 [ ]
   (உரிய இலக்கத்தை கூண்டில் எழுதுக)

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :
[ | | | | | | | | | ]

5. (i) பிறந்த திகதி :

   வருடம் [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

   (ii) விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது :

   வருடங்கள் [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

6. திருமணமானவரா / திருமணமாகாதவரா என்பது:
   திருமணமாகாதவர் - 1
   திருமணமானவர் - 2 [ ]
   (உரிய இலக்கத்தை கூண்டில் எழுதுக)

7. க.பொ.த. (சா.த.) பரீட்சையின் விபரங்கள் (முதல் அமர்வு) (தயவு செய்து பிரதிகளை இணைக்கவும்) :

   (i) பரீட்சையில் சித்தியடைந்த ஆண்டும் மாதமும் : ----.
   (ii) விண்ணப்பதாரியின் பரீட்சை இலக்கம் :----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| ...................... | ............... | ...................... | ............... |
| ...................... | ............... | ...................... | ............... |
| ...................... | ............... | ...................... | ............... |
| ...................... | ............... | ...................... | ............... |
| ...................... | ............... | ...................... | ............... |

8. க.பொ.த. (சா. த.) பரீட்சையின் விபரங்கள் (இரண்டாம் அமர்வு) அவசியமாயின் மாத்திரம் (தயவு செய்து பிரதிகளை இணைக்கவும்) :

   (i) பரீட்சையில் சித்தியடைந்த ஆண்டும், மாதமும் : ----.
   (ii) விண்ணப்பதாரியின் பரீட்சை இலக்கம் :----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| ...................... | ............... | ...................... | ............... |
| ...................... | ............... | ...................... | ............... |
| ...................... | ............... | ...................... | ............... |
| ...................... | ............... | ...................... | ............... |

9. க. பொ. த. (உ. த.) பரீட்சையின் விபரங்கள் (தயவு செய்து பிரதிகளை இணைக்கவும்) :

(i) பரீட்சையில் சித்தியடைந்த ஆண்டு :----.
மாதம் :----. திகதி :----.

(ii) விண்ணப்பதாரியின் பரீட்சை இலக்கம் :----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| ...................... | ............... | ...................... | ............... |
| ...................... | ............... | ...................... | ............... |

10. ஏனைய தகைமைகள்.- தொழில்நுட்ப / தொழில்சார் (தயவு செய்து பிரதிகளை இணைக்கவும்) :----.

11. உரிய துறை தொடர்பாக பெற்றுள்ள அனுபவம் :----.

மேலே 10,11 இற்குரிய தகைமைகளை உறுதிப்படுத்து கின்ற சான்றிதழ்களை இணைப்பாக சமர்ப்பிப்பது அத்தியாவசியமாகும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

12. பரீட்சைக் கட்டணம் :

பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் இலக்கம்

| S | L | D | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

1,000 ரூபா பரீட்சைக் கட்டணத்தை செலுத்திய பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும்.
(பற்றுச்சீட்டின் பிரதியை உங்கள் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.)

13. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் இத்தால் உறுதி கூறுகின்றேன். மேலும், இதில் உள்ளடங்கும் யாதாயினுமொரு தகவல் பிழையானதென்றும், உண்மைக்கு மாறானதென்றும் கண்டறியப்படும் பட்சத்தில், அவ்வாறு கண்டறியப்படுவது பதவிக்குத் தெரிவு செய்யப்பட முன்னர் இடம்பெறுமாயின் நான் தகுதியற்றவனாவேன் என்றும், நியமனம் பெற்ற பின்னர் கண்டறியப்பட்டால் எந்தவொரு நட்டஈடும் செலுத்தப்படாது பதவி நீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

14. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப் படுத்தல் :

இந்த விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கின்ற ...................... (முழுப் பெயர்) என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் என்றும், ............................. திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
உத்தியோகபூர்வ முத்திரை :----.

**அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்**

மேற்படி விண்ணப்பதாரரான திரு./ திருமதி/ செல்வி ...................... தற்போது இந்த அமைச்சில் / திணைக்களத்தில் ........................... ஆக நிரந்தர / தற்காலிக/ அமய ஊழியராக சேவையாற்றுகின்றார் என்றும், இப்பதவிக்கு இவர் தெரிவு செய்யப்படுவாராயின், அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என்றும் அறியத்தருகின்றேன்.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

----
(உத்தியோகபூர்வ முத்திரை).

பதவி :----.
திகதி :----.

2-377

---

**கல்வி அமைச்சு**

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைக்காக இணைப்பு (ஆங்கிலம்) மொழிப் பரீட்சை - 2017

இலக்கம் 1925/ 37 மற்றும் 2015, யூலை மாதம் 28 ஆந் திகதிய இலங்கை ஆசிரியர் கல்வியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை உத்தியோகத்தர்களுக்கான இணைப்பு (ஆங்கிலம்) மொழிப் பரீட்சை 2017, சித்திரை மாதம் கொழும்பில் நடைபெறும்.

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் சகல உத்தியோகத்தர்களையும் சேர்த்துக்கொள்ளும் தினம் தொடக்கம் (3) வருட காலத்திற்குள் இணைப்பு மொழி தொடர்பான தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். உத்தியோகத்தர் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழிக்காக குறைந்தபட்சம் திறமைச் சித்தி அல்லது அதனைவிட மேற்பட்ட சித்தியினைப் பெற்றிருப்பின் அல்லது ஆங்கில மொழி மூலம் சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பின் இவ் இணைப்பு (ஆங்கிலம்) மொழிப் பரீட்சையில் சித்தியடையும் தேவையில் இருந்து விடுவிக்கப்படுவர். ஏனைய உத்தியோகத்தர்கள் இப்பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

3. இப்பரீட்சைக்குரிய பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் இலக்கம் 1925/ 37 கொண்ட 2015, யூலை மாதம் 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்களின் வசதிக்காக

பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

(அ) பரீட்சை ஒழுங்கு விதிமுறைகள்.- பாடவிதானம் கீழ்க்குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது :

| விடய இல. | விடயம் | புள்ளி | காலம் (மணி) |
|---|---|---|---|
| 01 | ஆங்கில மொழி | 100 | 02 |

(i) English Grammar

A suitable level of proficiency on te following forms of grammar in the spoken and the written language is expected from the candidate.

- Tense and Number
- Sentences (Simple Compound/Complex/ Compound Complex)
- Relative Clauses
- Reported Speech
- Adjectives and Adverbs
- Deteminers
- Prepositions

(ii) Writing Skills

The knowledge on the modern formats and styles of writing is tested in this area of study.

- Essay Writing
- Summary Writing skills
- Report writing skills
- Letter writing

(iii) Candidate's ability to comprehend a printed text, infer meaning and written interpretation is expected.

- Reading and understanding the specific and general meaning of a printed text
- Reading and Interpretation (written)

4. சித்தியடைவதற்காக இப்பாடத்திற்குப் பரீட்சார்த்தி ஒருவர் குறைந்தபட்சம் 40 புள்ளிகள் அல்லது அதனைவிட மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

4.1 பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரர் களினதும் பெறுபேறுகள் கொண்ட ஆவணம் செயலாளர், கல்வி அமைச்சுக்கு அனுப்பப்படும். பரீட்சார்த்திகளுக்கு தனிப்பட்ட பெறுபேறுகளை வழங்கும் செயற்பாடுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்பட மாட்டாது.

5. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய ஏ4 (A4) அளவுள்ள கடதாசியின் இரு பக்கங்களையும் பாவித்து விண்ணப்பப்படிவம் தலைப்பு இலக்கம் 01-04 வரை முதலாவது பக்கத்திலும் எஞ்சியது 2 ஆவது பக்கத்திலுமாக தயாரிக்க வேண்டியதுடன் அதற்குரிய தகவல்களைத் தமது கையெழுத்தினால் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். மாதிரி விண்ணபப்படிவதத்திற்கு ஒவ்வாத விண்ணபப்படிவங்கள் மற்றும் முழுமையாகப் பூர்த்திசெய்யப்படாத தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவம் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் போட்டோ பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாக அமையும் என அறிவிக்கிறேன். மேலும் பூர்த்திசெய்யப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதா என்பது தொடர்பில் விண்ணப்பதாரியினால் வினவ வேண்டும். அவ்வாறின்றேல் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்பட்டதாக மேலும் குறிப்பிடுகிறேன். விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும் வேளையில் அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்தில் மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிட வேண்டும்.

6. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நடாத்தப்படுவதுடன் அதனை நடாத்துவதற்காக அவரினால் விதிக்கப்பட்டுள்ள சட்ட ஒழுங்குகளைப் பின்பற்ற பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டுள்ளனர். பரீட்சைக்கான சட்ட ஒழுங்கு விதிமுறைகள் இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

7. விண்ணப்பப்படிவம் 2017, பங்குனி மாதம் 9 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" என்னும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பீடாதிபதி/ வலயக் கல்விப் பணிப்பாளர் அல்லது தங்களது சேவைப் பொறுப்பாளர் ஊடாகப் பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். அன்றைய தினத்திற்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

8. அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தைப் பொறுப்பேற்கும் இறுதித் தினமன்று அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் (உரியதாயின் மாத்திரம்) சரியாகப் பூரணப்படுத்தப்பட்டு விண்ணப்பப்படிவங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும்.

விண்ணப்பதாரிக்கு அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நடைபெறும் தினமன்று குறைந்தபட்சம் 3 நாட்களுக்கு முன்னர் தமது அனுமதிப்பத்திரம் கிடைக்காத பட்சத்தில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு அது தொடர்பில் பரீட்சைத் திணைக் களத்திற்கு அறிவிக்க வேண்டும்.

அவ்வாறு அறிவிக்கும்போது விண்ணப்பதாரர்களின் முழுப்பெயர், முகவரி, தேசிய ஆள் அடையாள அட்டை மற்றும் விண்ணப்பித்த பரீட்சையின் பெயரைக் குறிப்பிட வேண்டும். கொழும்புக்கு வெளியே உள்ள பரீட்சார்த்தி ஆயின் அவ்விபரங்களுடன் அனுமதிப்பத்திரத்தின் பிரதியையும் தொலைநகல் இலக்கத்தையும் அனுப்பி வினவுவது மிகப் பொருத்தமானதாகும். பரீட்சைத் திணைக்களத்துடன் வினவப்படும் வேளையில் தேவைப்படும் பட்சத்தில் விண்ணப்பதாரியின் பரீட்சார்த்தி அந்தஸ்தினை உறுதிப்படுத்துவதற்காக தாம் வைத்திருந்த விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்துவது உரியதாயின் அதற்கான பற்றுச்சீட்டின் பிரதியையும் விண்ணப்பப்படிவத்தை தபாலிலிட்டபோது பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சீட்டையும் தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும். பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதனை ஏற்றுக்கொண்டல்ல என்பதனைக் கருத்தில்கொள்ளக் கூடாது.

9. மேலே 8 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை நிவர்த்தி செய்யத் தவறும் பட்சத்தில் பரீட்சார்த்தியால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

9.1 பரீட்சார்த்தி தமக்கு உத்தரவிடப்பட்ட பரீட்சை மண்டபத்தில் உரிய பரீட்சை இலக்கத்தின்கீழ் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் சகல பரீட்சார்த்திகளும் பரீட்சையின் முதலாவது நாள் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்தி அனுமதிப்பத்திரத்தை மண்டபப் பொறுப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும். தமது அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்பட மாட்டாது.

10. பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக சாட்சிகளைச் சமர்ப்பிப்பது பரீட்சார்த்தியின் பொறுப்பாகும். இதற்காக,

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

11. **பரீட்சைக் கட்டணம்** :

(அ) இப்பரீட்சைக்காக அறவிடப்பட்ட கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்பதுடன் வேறு பரீட்சைக் கட்டணத்திற்கு மாற்றவும் இடமளிக்கப்பட மாட்டாது.

(ஆ) முதல் தடவையில் பரீட்சைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) இதற்குப் பின்னர் ஒவ்வொரு தடவைக்காகவும் 250 ரூபா அறவிடப்படும்.

பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இன்கீழ் அரச வருமானத்திற்கு வைப்பிலிடக்கூடியவாறு நாட்டிலுள்ள எந்தவொரு தபாலகங்களிலும் நிதி செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் கழராது ஒட்ட வேண்டும். மேலும் அதன் நிழற்படப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாகும். பரீட்சைக் கட்டணத்திற்காக காசுக் கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

12. பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்கு விதிமுறைகளுக்குப் பரீட்சார்த்தி கட்டுப்பட வேண்டும். அச்சட்ட ஒழுங்கு விதிமுறைகளை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உட்பட வேண்டி ஏற்படும் என அறிவிக்கிறேன்.

13. இவ்வறிவித்தல் மூலம் தழுவப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது தொடர்பில் தீர்மானிக்கும் உரிமை கல்வி அமைச்சின் செயலாளருக்குரியதாகும்.

சுனில் ஹெட்டியாராச்சி,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இசுருபாய", பெலவத்த,
2017, தை 25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைக்காக இணைப்பு (ஆங்கிலம்) மொழிப் பரீட்சை - 2017**

Link Language (English) Examination For Sri Lanka Teacher Educator's Service - 2017

(பீடாதிபதி/ ஆசிரியர் கல்லூரி அதிபர்கள்/ ஆசிரியர் மத்திய நிலைய முகாமையாளர்களினால் "பரீட்சை ஆணையாளர், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இலக்கம் 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பவும். பரீட்சையின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.)

1. (i) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.
(உ+ம் HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

(ii) இறுதியில் வரும் பெயரை முதலிலும் மற்றைய பெயர்களின் முதலெழுத்துக்களைப் பின்னரும் குறிப்பிட்டு (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உ+ம் : GUNAWARDHANA, H. M. S. K.)

(iii) முழுப்பெயர் (சிங்களம்/ தமிழில்) :----.

2. (i) இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் :----.
(ii) கல்வியியற் கல்லூரி/ ஆசிரியர் கல்லூரி/ ஆசிரியர் மத்திய நிலையம் :----.
(iii) வலயக் கல்வி அலுவலகம் :----. (ஆசிரியர் கல்லூரி/ ஆசிரியர் மத்திய நிலைய உத்தியோகத்தர்களுக்காக மாத்திரம்)

3. முகவரி :

(i) சொந்தம் :----.
(ii) அலுவலகம் :----.
(iii) அனுமதிப்பத்திரத்தை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(iv) கடமைத் தொலைபேசி இலக்கம் :----.

4. (i) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(ii) பிறந்த திகதி :

வருடம் [ ][ ][ ][ ] மாதம் [ ][ ] திகதி [ ][ ]

(iii) பால் :

ஆண் - 0
பெண் - 1 [ ]

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடவும்.)

5. பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் விபரங்கள் :

பற்றுச்சீட்டு இலக்கம் :----.
தபால் அலுவலகம் :----.
திகதி :----.

| பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும். |
|---|

6. மேற்கூறப்பட்ட தகவல்கள் சரியானதென தெரிவிக்கிறேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு கட்டுப்படுகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

7. பரீட்சை ஆணையாளர் நாயகம்,

மேற்கூறப்பட்ட விபரங்களைக் கொண்ட பரீட்சார்த்தி எனது கல்வியியற் கல்லூரியில்/ ஆசிரியர் கல்லூரியில்/ ஆசிரியர் மத்திய நிலையத்தின் உத்தியோகத்தர் என உறுதிப்படுத்துகிறேன். மேலும் பரீட்சார்த்தி பரீட்சைக் கட்டணத்தில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாகவும்/ பரீட்சார்த்தி பரீட்சைக் கட்டணத்திற்கான பற்றுச் சீட்டினைச் சரியாக ஒட்டியுள்ளதாகவும் உறுதிப் படுத்துகிறேன்.

----,
பீடாதிபதி/ ஆசிரியர் கல்லூரி அதிபர்கள்/
ஆசிரியர் மத்திய நிலைய முகாமையாளர்கள்/
வலயக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பம்.

திகதி :----.
முகவரி :----.
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்.)
(உரியதல்லாத சொற்களை நீக்கவும்.)

2-505/ 1

---

## கல்வி அமைச்சு

### இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் III ஆம் தரத்தின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2017 (I)

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் III ஆம் தரத்தின் உத்தியோகத்தர்களின் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2017 வைகாசி மாதத்தில் கொழும்பில் நடைபெறும்.

2. இப்பரீட்சைக்குரிய பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிமுறைகள் இலக்கம் 1925/ 37, 2015, யூலை மாதம் 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. வசதி கருதி அப்பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிமுறைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

உத்தியோகத்தருக்கு இவ்வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்கு உரிய விடயங்களுக்காக ஒரு தடவையில் அல்லது தனித்தனியான சந்தர்ப்பங்களில் தோற்ற முடியும்.

(அ) பரீட்சை ஒழுங்கு விதிமுறைகள்.- வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையின் பாடங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :

(i) பாட இலக்கம் 01 - பொது முகாமைத்துவம் மற்றும் தாபனச் செயற்பாடுகள் - 100 புள்ளிகள் - நேரம் : 1 1/ 2 மணித்தியாலம்

(ii) பாட இலக்கம் 02 - நிதி ஒழுங்குக் கோவை - 100 புள்ளிகள் - நேரம் : 1 1/ 2 மணித்தியாலம்

(iii) பாட இலக்கம் 03 - கல்வி மறுசீரமைப்பு மற்றும் கல்விச் சட்டம் - 100 புள்ளிகள் - நேரம் : 2 மணித்தியாலம்

(iv) பாட இலக்கம் 04 - ஆங்கில மொழி - 100 புள்ளிகள் - நேரம் : 2 மணித்தியாலம்

பாடவிதானம் :

(i) பொது முகாமைத்துவம் மற்றும் தாபனச் செயற்பாடுகள்.- அரச தாபன விதிக்கோவையின் i, ii, iii, iv, v, vii, viii, ix, xii, xiii, xiv, xxiv, xxviii, xxx மற்றும் xxxi ஆகிய வாசகங்கள் மீது விசேட கவனத்துடன்,

அரச சேவை ஆணைக்குழுச் சபையின் செயற்பாட்டு ஒழுங்குவிதிச் சட்டங்கள் I, III, IV, V, VI, VIII, X மற்றும் XII ஆம் வாசகத்தின் மீது விசேட கவனத்துடன்,

(ii) நிதி ஒழுங்குக் கோவை.- அரசின் நிதி ஒழுங்குக் கோவையின் 1 ஆம் வாசகத்தின் i, ii, v, viii, xii மற்றும் xiv வாசகங்களுக்கு விசேட கவனத்துடன்,

(iii) கல்வி மறுசீரமைப்பு மற்றும் கல்விச் சட்டம்.- பரீட்சார்த்திகளின் கீழ் குறிப்பிடப்பட்ட கட்டளைச் சட்டம் மற்றும் பாராளுமன்றச் சட்டம் தொடர்பில் அறிவு எதிர்பார்க்கப்படுகின்றது.

(i) 1972 ஆம் ஆண்டின் கல்வி மறுசீரமைப்பு (கல்வியின் புதிய வழிகாட்டல்)

(ii) 1981 ஆம் ஆண்டின் கல்வி வெள்ளைப்பத்திரம்

(iii) 1992 ஆம் ஆண்டின் தேசிய கல்வி ஆணைக் குழுவின் 1 ஆவது அறிக்கை

(iv) 1997 ஆம் ஆண்டின் புதிய கல்வி மறுசீரமைப்பு

(v) 1999 ஆம் ஆண்டு தொடக்கம் அமுல் படுத்தப்பட்ட புதிய கல்வி கல்வி மறுசீரமைப்பு (ஆரம்ப இடைநிலை மற்றும் க. பொ. த. (உ. த.)

(vi) 1976 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பகிரங்கப் பரீட்சைச் (மறுசீரமைப்பு) சட்டத்தினால் மறுசீரமைக்கப்பட்ட 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பகிரங்கப் பரீட்சைச் சட்டம்

(vii) 1986 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவகச் சட்டம்

(viii) 1986 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க கல்வி விஞ்ஞானச் சட்டம்

(ix) 1991 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கல்வி ஆணைக்குழு சபைச் சட்டம்

(x) 1997 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க தேசிய ஆசிரியர் கல்வி அதிகார சபைச் சட்டம்

(xi) 13 ஆவது சீர்திருத்தத்திற்கு மற்றும் அடிப்படை உரிமை தொடர்பாக 3 ஆவது வாசகத்தின் மீது விசேட கவனத்துடன் இலங்கை அரசியல் யாப்பு

(xii) கல்விக்குரியதாக மாகாண சபையினால் விதிக்கப்பட்டுள்ள கொள்கைப் பிரகடனம்

(iv) **English Language.-** This assess the English Language Competence of the following subject areas.

- English Grammar - Tense and Number, Sentences

  (Simple/Compound/Complex/Compound Complex), Relative Clauses, Adjectives and Adverbs, Prepositions.

- Listening and Speaking Skills

- General Greetings and Introductions, Giving and getting information, Advising, Suggesting and Expressing Opinions, Telephone Skills, interviewing Skills, meetings.

- Writing Skills - Internal modes of communication, Formal correspondence skills, Writing Descriptions/ Explanations, Summery Writing skills, Report Writting skills.

**குறிப்பு**.- பரீட்சார்த்தியினால் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைவதற்காக அவ்வவ் வினாத்தாள்களினால் 40% புள்ளிகளைப் பெற வேண்டும். ஒரு பரீட்சார்த்திக்கு ஒரு தடவையில் ஒரு பாடத்திற்கு அல்லது அதனைவிட மேற்பட்ட எண்ணிக்கைக்குத் தோற்ற முடியும்.

3. பரீட்சையின் மொழி மூலம் :

(i) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடைபெறும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தைப் பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்பட மாட்டாது.

(ii) போட்டிப் பரீட்சையின் மூலம் அரச சேவைக்குப் பிரவேசித்த பரீட்சார்த்தியாயின் இப்பரீட்சையின் மொழி மூலமான போட்டிப் பரீட்சையில் தோற்றிய மொழி மூலமும் போட்டிப் பரீட்சையின்றி அரச சேவையில் பிரவேசித்த பரீட்சார்த்தியாயின் அப்பரீட்சையின் மொழி மூலமாக அரச சேவையில் இணைந்துகொள்வதற்குத் தகைமை பெற்று பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

4. பரீட்சார்த்தி தமக்குரியதல்லாத மொழியில் பரீட்சைக்குத் தோற்றியதாக தெரியவரும் பட்சத்தில் அவரது பரீட்சார்த்தி அந்தஸ்து இரத்துச் செய்யப்படும்.

5.விண்ணப்பப்படிவத்தை இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய ஏ4 (A4) அளவுடைய கடதாசியில் இரு புறமும் பாவித்து இலக்கம் 1 தொடக்கம் 5 வரைக்கும் முதலாம் பக்கத்திலும் மிகுதி இரண்டாம் பக்கத்திலும் அமையுமாறு சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிட வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாது சரியாகப் பூர்த்திசெய்யப்படாத தகவல்கள் கொண்ட விண்ணப்பப்படிவம் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதியினை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

6. இப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடாத்தப்படுவதுடன் பரீட்சையை நடாத்துவதற்காக அவரினால் விதிக்கப்பட்டுள்ள சட்ட ஒழுங்குகளைப் பின்பற்ற பரீட்சார்த்தி கட்டுப்பட்டுள்ளார்.

7. விண்ணப்பப்படிவம் 2017, பங்குனி மாதம் 17 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் III ஆம் தர உத்தியோகத்தர்களுக்கான வினைத் திறன் தடை தாண்டல் பரீட்சை - 2017 (1)" எனக் குறிப்பிடப் பட்டிருத்தல் வேண்டும்.

8. அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தைப் பொறுப்பேற்கும் இறுதித் தினமன்று அல்லது அதற்கு முன்னர் சரியாகப் பூரணப்படுத்தப்பட்டு விண்ணப்பப்படிவங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர் களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும். விண்ணப்பதாரிக்கு அனுமதிப்பத்திரம் அனுப்பப்படுவதுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நடைபெறும் தினமன்று குறைந்தபட்சம் 3 நாட்களுக்கு முன்னர் தமது அனுமதிப்பத்திரம் கிடைக்காத பட்சத்தில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு அது தொடர்பில் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். தாங்கள் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவம் மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டிருப்பின் இந்நிதி செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் உறுதிப்படுத்தப்பட்ட போட்டோப் பிரதியுடன் விண்ணப்பப்படிவத்தைத் தபாலி லிடும்போது பதிவுசெய்த பற்றுச்சீட்டையும் கொழும் பிற்கு வெளிப்பிரதேசமாயின் அனுமதிப்பத்திரத்தை அனுப்புவதற்காக தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு மேற்கொள்ளப்படும் தங்களது கோரிக்கைக் கடிதத்துடன் தொலைநகல் இலக்கத்தையும் அனுப்பி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிப்பது மிகவும் பயன்மிக்கதாகும்.

9. மேலே 8 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை நிவர்த்தி செய்யத் தவறும் பட்சத்தில் பரீட்சார்த்தியால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

10. இவ்விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தியிருக்க வேண்டும். ஏதேனும் நிறுவனத்தினால் பரீட்சைக்குக் கோரிக்கை விடுக்கும் விண்ணப்பதாரி தமது கையொப்பத்தைத் தாபனப் பொறுப்பாளர் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் ஊடாக உறுதிப்படுத்த வேண்டும். பரீட்சை ஆரம்பமாகும் தினத்தில் பரீட்சை மண்டபப் பொறுப்பாளருக்கு தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். தமது அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திக்குப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்பட மாட்டாது.

11. பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக சாட்சிகள் சமர்ப்பிப்பது பரீட்சார்த்தி யின் பொறுப்பு என்பதுடன் அதற்காகக் கீழ்க்குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் எவையேனும் இதில் செல்லுபடியாகும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

12. பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்குவது அவர் பரீட்சைக்குத் தோற்ற சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்று ஏற்றுக்கொண்டல்ல என்பதனைக் கருத்தில்கொள்ள வேண்டும்.

13. இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி கீழ்க்குறிப்பிடப்பட்ட அடிப்படையில் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்த வேண்டும் :

(i) முதல் தடவையில் பரீட்சைக்குத் தோற்றுப வரிடமிருந்து முழுப் பரீட்சைக்கு அல்லது பகுதிக்காகக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.
(ii) பரீட்சைக்குத் தோற்றுவது முதல் தடவை அல்லாத சந்தர்ப்பத்தில் கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு பரீட்சைக் கட்டணங்கள் அறவிடப்படும்.

முழுமையான பரீட்சைக் கட்டணம் 500 ரூபா ஆகும். ஒரு பாடத்திற்கு 250 ரூபா ஆகும்.

பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இன்கீழ் அரச வருமானத்திற்கு வைப்பிலிடக்கூடியவாறு நாட்டிலுள்ள தபாலகங்கள்/ உப தபால் அலுவலகங்களுக்கு நிதி செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில்

கழராது ஒட்ட வேண்டும். மேலும் அதன் நிழற்படப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாகும். பரீட்சைக் கட்டணத்திற்காக காசுக் கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன், பரீட்சைக்காகச் செலுத்தப்படும் கட்டணம் எக்காரணம் கொண்டும் மீள் கொடுப்பனவு அல்லது வேறு பரீட்சைக்காக மாற்றப்பட மாட்டாது.

14. பரீட்சைக்குத் தோற்றும் சகல விண்ணப்பதாரிகளினதும் பெறுபேறுகளைக் கொண்ட ஆவணத்தை "செயலாளர், கல்வி அமைச்சு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்" மூலம் வழங்கப்படும்.

15. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வாசகங்களுக்கிடையே ஏதேனும் ஒப்பீடற்ற நிலைமைகள் எழும் பட்சத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தல் சரியானது எனக் கருத்தில் கொள்ளப்படும்.

16. இவ்வறிவித்தல் மூலம் ஒழுங்கு விதிமுறைகள் வழங்கப்படாத ஏதேனும் ஒரு விடயம் தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

சுனில் ஹெட்டியாராச்சி,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
'இசுருபாய',
பத்தரமுல்ல,
2017, தை 25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் III ஆம் தரத்தின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2017 (1)**

Efficiency Bar Examination for the Officers in Grade III of Sri Lanka Teacher Educators' Service - 2017 (1)

விண்ணப்பப்படிவம் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி இல. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு நிறுவனத் தலைவர் ஊடாக பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். (பரீட்சையின் பெயர் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும்.)

உத்தியோகத்தர் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தைக் குறிப்பிடவும்.)

1. (i) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.
(உ-ம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)
(ii) பெயரைக் குறிப்பிட்டு இறுதியில் முதலெழுத்துக் களைக் குறிப்பிடவும் (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) :----.
(உ-ம் : GUNAWARDHANA, H. M. S. K.)
(iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. (i) பிறந்த திகதி :

ஆண்டு :----; மாதம் :-----, திகதி :----.

(ii) தேசிய ஆளடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(iii) பால்

ஆண் - 0
பெண் - 1

(உரிய இலக்கத்தைக் குறிப்பிடவும்.)

3. (i) பதவிப்பெயர் :----.

(ii) சேவையாற்றும் கல்வியியற் கல்லூரி/ ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி/ ஆசிரிய மத்திய நிலைய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(அனுமதிப்பத்திரம் இம்முகவரிக்கு அனுப்பப்படும்.)

4. சொந்த முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

5. அறிவித்தலில் 2 ஆவது பந்தியின் (அ) இன்கீழ் கூறப்பட்டுள்ள பாட இலக்கம் மற்றும் பாடத்துடன் எடுக்கும் பாடங்களைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

| பாட இலக்கம் | பாடத்தின் பெயர் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

6. இதற்கு முன்னர் இப்பரீட்சைக்கு முழுமையாக அல்லது அதிலொரு பகுதிக்குத் தோற்றியுள்ளீரா ? அவ்வாறாயின் பாடம் மற்றும் தோற்றிய ஆண்டு, மொழியைக் குறிப்பிடவும் :

| பாடங்கள் | ஆண்டு | மொழி | பரீட்சைச் சுட்டெண் |
|---|---|---|---|
| | | | |
| | | | |

7. பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் உரித்தாயின் அதற்குரிய விபரங்கள் :

(i) பற்றுச்சீட்டு இலக்கம் :----.
(ii) செலுத்திய தபால் அலுவலகம் :----.
(iii) திகதி :----.

| பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும். |
|---|

8. மேற்கூறப்பட்ட விபரங்கள் உண்மையானது என்றும் வர்த்தமானி அறிவித்தலில் 3 ஆவது வாசகத்திற்கமைய மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற எனக்கு உரிமை இருப்பதாகவும் உறுதி செய்கின்றேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளரினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கும் கட்டுப்பட இணங்குகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,

பரீட்சைத் திணைக்களம்.

இவ்விபரம் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதி பெற்றவர் என்றும் வர்த்தமானி அறிவித்தலின் 3 ஆவது வாசகத்திற்கமைய அவரால் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்ற தகுதி உடையவர் என்றும் உறுதி செய்கின்றேன். பரீட்சார்த்தி பரீட்சைக் கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்பட்டதாக/ உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியதாகவும் அப்பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளதாகவும் உறுதி செய்கின்றேன்.

----,
பீடாதிபதி/ ஆசிரிய மத்திய நிலையப் பொறுப்பாளரின் கையொப்பம்.
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்.)
(தேவையில்லாத வசனத்தை நீக்கிவிடுக.)

திகதி :----.

2-505/ 2

---

## மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு

*மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் வெளிக்கள/ அலுவலகப் பிரிவு சேவை வகுதி 2 உளவளத்துணை உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்க்கும் திறந்த போட்டிப் பரீட்சை - 2016 (2017)*

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் வெளிக்கள/அலுவலகப் பிரிவு சேவை வகுதி 2 உளவளத்துணை உத்தியோகத்தர் பதவியில் நிலவும் 3 வெற்றிடங்களுக்கு (யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மட்டக்களப்பு) தகைமையுள்ளவர்களை ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்காக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு செயலாளரின் பணிப்பின் பேரில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு முறை**.- இந்தப் பரீட்சையின் எழுத்துமூலப் பகுதி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும். எழுத்துமூலப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள பரீட்சார்த்திகள் திறமை ஒழுங்கில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

2. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்** :

இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதிய உரித்துடையது. விதவைகள்/ தபுதாரர் அனாதைகள் நிதியத்திற்குப் பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

இப்பதவி 3 வருட தகுதிகூர்நிலைக் காலத்திற்கு உட்பட்டது. உளவளத்துணையாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டு 3 வருட காலப்பகுதிக்குள் ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு அமைய முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

2014.01.21 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 01/2014 இன் பிரகாரம் பதவிக்கு நியமிக்கப்பட்டு 5 வருட காலப்பகுதிக்குள் சேவைக்கு உள்வாங்கப்பட்ட மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழி தொடர்பாக ஏற்புடைய தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அரச கரும மொழி அல்லாத மொழி மூலத்தில் சேவைக்கு உள்வாங்கப்பட்டிருப்பின் தகுதிகூர்நிலைக் காலப்பகுதிக்குள் உரிய அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, அரசாங்க நிதி ஒழுங்கு விதிகள் மற்றும் திணைக்கள ரீதியான ஏனைய கட்டளைகள் மூலம் இந்த நியமனம் கட்டுப்படுத்தப்படும்.

**3. தேவையான தகைமைகள் :**

3.1 ***கல்வித் தகைமைகள்.***- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சமூக விஞ்ஞானம் தொடர்பான அல்லது உளவியல் விஞ்ஞானம் தொடர்பான விசேட பட்டத்தோடு உளவளத்துணை தொடர்பான பட்டப் பின்படிப்பு டிப்ளோமா அல்லது அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல் ;

3.2 ***அனுபவம்.***- உளவளத்துணை தொடர்பான ஒரு வருட அனுபவம் ;

3.3 ***உடல் தகைமைகள்.***- சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல், உள ஆரோக்கியத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

3.4 ***ஏனைய தகைமைகள் :***

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரிகள் சிறந்த நல்லொழுக்கமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும் ;

(iii) விண்ணப்பதாரிகள் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்குத் தேவையான தகைமைகளை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு எல்லாவிதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

**4. வயதெல்லை.**- விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 21 வயதுக்குக் குறையாத 35 வயதுக்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும். அதற்கிணங்க, வயது தொடர்பான தகைமைகளைப் பூர்த்திசெய்வது விண்ணப்பதாரிகளின் பிறந்த திகதி 1996.03.09 ஆந் திகதியோ அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1982.03.09 ஆந் திகதியோ அல்லது அதற்குப் பின்னர் இருந்தால் மாத்திரமேயாகும்.

**5. சம்பள அளவுத்திட்டம்.**- இப்பதவிக்கு ரூபா 34,605 - 10 x 660 - 11 x 755 - 15 x 930 - ரூபா 63,640 மாதாந்த சம்பள அளவுத்திட்டம் உரித்துடையது. (2016.02.25 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/ 2016 இன் இல. MN 5-2016 சம்பள அளவுத்திட்டம்)

**6. ஆட்சேர்ப்புச் செய்யப்படும் முறை.**- எழுத்துமூலப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும். எழுத்துமூலப் பரீட்சையில் சகல பாடங்களிலும் சித்தியடைகின்ற விண்ணப்பதாரர்களில் திறமை ஒழுங்கிற்கு அமைய உச்ச புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரர்களிலிருந்து ஆட்சேர்ப்புச் செய்ய உத்தேசிக்கப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமனான விண்ணப்பதாரிகள் பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

6.1 எழுத்துமூலப் பரீட்சை :

| வினாத்தாள் | காலம் | உச்ச புள்ளிகள் | சித்தியடையும் புள்ளிகள் |
|---|---|---|---|
| உளச்சார்புப் பரீட்சை | 1 மணித்தியாலம் | 100 | 50% |
| பொது அறிவு | 1 மணித்தியாலம் | 100 | 50% |

6.2 பரீட்சைக்குரிய பாடத்திட்டம் :

| வினாத்தாள் | பாடத்திட்டம் |
|---|---|
| உளச்சார்புப் பரீட்சை | வாக்கிய அமைப்புக்கள், எண்கள் மற்றும் உருக்கள் உள்ளடக்கப்பட்டு முன்வைக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பாக விண்ணப்பதாரியின் முடிவுகள் மற்றும் பதில்களை பரீட்சிப்பதனூடாக விண்ணப்பதாரிகளின் கிரகிக்கும் ஆற்றல் மற்றும் அறிவுத்திறன் மதிப்பிடப்படும். பல்தேர்வு மற்றும் சுருக்க விடைகள் எழுதும் அமைப்பிலான 50 வினாக்களைக் கொண்டிருக்கும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். |
| பொது அறிவு | தேசிய, பிராந்திய மற்றும் உலகளாவிய ரீதியில் பல்வேறுபட்ட அமைப்புச் சூழல்களில் காணப்படும் சமூக, கலாசார, கல்வி, விஞ்ஞான, அரசியல், பொருளாதார மற்றும் ஏனைய காரணிகள் தொடர்பில் பரீட்சார்த்தியின் அறிவு இதன் மூலம் மதிப்பிடப்படும். பல்தேர்வு மற்றும் சுருக்க விடைகள் எழுதும் அமைப்பிலான வினாக்களைக் கொண்டிருக்கும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். |

6.3 நேர்முகப் பரீட்சை.- நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக மாத்திரம் நடாத்தப்படும். (இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளையும் பூர்த்திசெய்திருத்தல் கட்டாயமானதாகும்.)

6.4 பெறுபேறுகளை வெளியிடுதல்.- எழுத்துமூலப் பரீட்சையின் புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு திறமை ஒழுங்கில் தயாரிக்கப்பட்ட பெறுபேற்று அட்டவணை மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் செயலாளரிடம் ஒப்படைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகளை அனுப்புவதற்கோ அல்லது www.results.exams.gov.lk எனும் இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படும்.

7. **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக் கட்டணம் 400 ரூபா ஆகும். பரீட்சைக் கட்டணங்கள் பரீட்சை ஆணையாளரது வருமானத் தலைப்பு 2003-02-13 இன்கீழ் அரசாங்கத்தின் வருமானத்திற்கு சேரும் விதத்தில் நாட்டிலுள்ள எந்தவொரு தபால்/ உப தபால் நிலையங்களில் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொண்ட ரசீதை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் கழன்றுவிடாதவாறு ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக்காகச் செலுத்திய பணத்தை எந்தவொரு காரணத்திற்காகவும் மீண்டும் பெறுவதற்கோ அல்லது வேறு பரீட்சையொன்றுக்கு மாற்றீடு செய்வதற்கோ முடியாது. பரீட்சைக் கட்டணம் செலுத்திய ரசீதின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும். பரீட்சைக் கட்டணத்திற்காக காசுக் கட்டளைகளோ அல்லது முத்திரைகளோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

8. **விண்ணப்பத்தைத் தயாரிக்கும் முறை** :

8.1 இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக ஏ4 அளவிலான தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி,

(அ) இல. 1 முதல் 3 வரை முதல் பக்கத்திலும் ஏனைய பகுதிகளில் அடுத்து வரும் பக்கங்களில் அமையுமாறும் தயாரித்துக்கொள்ளல் வேண்டும். பரீட்சார்த்தி தனது கையெழுத்தினால் தெளிவாக விண்ணப்பத்தை நிரப்புதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தயாரிக்கின்றபோது தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் கட்டாயமாகும்.

(ஆ) உரிய மாதிரி விண்ணப்பத்திற்கு ஏற்புடையதாகாத உரிய தினத்தில் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத மற்றும் சரியாக நிரப்பப்படாத பூரணமற்ற நிலையில் காணப்படும் விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.

8.2 இந்தப் பரீட்சை 2017, மே மாதம் கொழும்பில் நடைபெறும்.

8.3 அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உள்ளதாக குறிப்பிட்டு அந்த அறிவித்தலுக்கு அமைய உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி உரிய திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு உரிய தகைமைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன என்ற பூர்வாங்க

முடிவின் பிரகாரம் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி அட்டை வழங்கப்படுவதன் மூலம் விண்ணப்பதாரி இந்தப் பதவிக்கு தகுதிபெற்றுள்ளார் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளதாக அமைய மாட்டாது.

8.4 ***விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முறை.***- சரியாக நிரப்பிய விண்ணப்பங்களை 2017.03.09 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்குபடுத்தல் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் உளவளத்துணை உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்க்கும் திறந்த போட்டிப் பரீட்சை - 2016" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பானதொரு கடிதம் தபாலில் காணாமல் போதல் தொடர்பாகவோ அல்லது தாமதமாகியது தொடர்பாகவோ முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதி வரையில் விண்ணப்பங்களை தாமதப்படுத்துவதன் மூலம் ஏற்படும் நட்டத்தை விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்றல் வேண்டும்.

8.5 விண்ணப்பத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்திபெற்ற நொத்தாரிசு, முப்படைகளில் அதிகாரவாணைபெற்ற உத்தியோகத்தரொருவராலோ அல்லது 2,92,080 ரூபா அல்லது அதற்கு மேல் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் பதவிநிலை உத்தியோகத்தரொருவராலோ உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

8.6 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் பூர்வாங்க முடிவின் பிரகாரம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குட்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்கு ஏற்புடைய ரசீதுடன் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டு ஏற்புடையதாயின் மாத்திரம் திணைக்களத் தலைவரின் சிபாரிசுடன் உரிய முறையில் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை விநியோகிக்கப்பட்ட உடன் அது பற்றிக் குறிப்பிட்டு பரீட்சைத் திணைக்களத்தினால் அறிவித்தல் ஒன்று வெளியிடப்படும். அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நடைபெறும் திகதிக்கு ஆகக்குறைந்தது ஐந்து தினங்களுக்கு முன்பேனும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு இணங்க அதுபற்றி பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்குபடுத்தல் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவில் வினவுதல் வேண்டும். அவ்வாறு வினவும்போது தாங்கள் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர் தங்களது முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றைச் சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். கொழும்புக்கு வெளியிலுள்ள ஒரு பிரதேசத்தில் வசிப்பவராயின் மேலுள்ள தகவல்களுடன் தங்களுக்கு அனுமதி அட்டையை அனுப்புவதற்குத் தொலைநகல் (பெக்ஸ்) இலக்கமொன்றையும் குறிப்பிட்டு வேண்டுகோள் கடிதம் ஒன்றைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு தொலைநகல் மூலம் அனுப்பி வைப்பது சாலச்சிறந்ததாகும். அவ்வாறு வினவும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்கப்படும் ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்தும் பொருட்டு தங்கள் வசம் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய ரசீதின் பிரதி மற்றும் விண்ணப்பத்தைப் பதிவுத்தபாலில் அனுப்பியதற்கான சிட்டை என்பவற்றைத் தயார் நிலையில் வைத்திருத்தல் வேண்டும்.

8.7 விண்ணப்பதாரியொருவர் தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் உரிய சுட்டிலக்கத்தின்கீழ் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சார்த்திகள் அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். அத்தோடு பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளன்று பரீட்சை நிலைய அதிபருக்கு தனது கையொப்பத்தை உறுதிசெய்த அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். தனது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திக்கு இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது.

9. **பரீட்சார்த்தியின் அடையாளம்**.- பரீட்சார்த்திகள் தமது அடையாளத்தை நிரூபிக்க பின்வரும் ஆவணங்களில் ஒன்றைப் பரீட்சை நிலைய அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் :

(i) ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்படும் தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்).

10. **பிழையான தகவல்கள் வழங்குதல்**.- விண்ணப்பதாரிகளை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய தகைமைகள் உள்ளனவா எனப் பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் பிழையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது தெரியவரும் பட்சத்தில் அவர்களது பரீட்சார்த்த தகைமை இரத்துச் செய்யப்படும். அவ்வாறான பிழையான அல்லது பொய்யான தகவலொன்று நியமனம் பெற்ற பின்னர் தெரியவருமிடத்து அதற்கு ஏற்புடைய நடவடிக்கைகளுக்கு அமைவாக பதவி நீக்கம் செய்யப்படும்.

11. இந்தப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதோடு, பரீட்சை நடாத்தல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டுள்ளனர். அவ்வாறான சட்டவிதிமுறைகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் ஆளாதல் வேண்டும்.

நியமனம் வழங்குதல் மற்றும் ஏனைய சகல விடயங்கள் தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் செயலாளருக்கு உரியது.

**குறிப்பு**.- இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தல்களில் ஏதேனும் முரண்பாடுகள் எழுமிடத்து சிங்கள மொழியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலே மேலோங்கும் என்பதைக் கவனத்திற்கொள்க.

சந்திராணி சேனாரத்ன,
செயலாளர்.
மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு,

5 ஆம் மாடி,
'செத்சிறிபாய' II ஆம் கட்டம்,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் வெளிக்கள/ அலுவலகப் பிரிவு சேவை வகுதி 2 உளவளத்துணை உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்க்கும் திறந்த போட்டிப் பரீட்சை - 2016 (2017)**

Open Competitive Examination For Recruitment For Counseling Officers, Grade II in Field/Office Based Officer - Segment 2 to the Ministry of Woman and Child Affairs - 2016 (2017)

பரீட்சைக்குத் தோற்றும் ஊடக மொழி :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

| |
|---|
| |

(ஏற்புடைய இலக்கத்தைக் கூட்டிற்குள் எழுதுக.)

1. 1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதியில் வரும் பெயரை முதலில் குறிப்பிட்டு அடுத்ததாக முதலெழுத்துக்களைக் குறிப்பிடுக (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : GUNAWARDHANA, H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

1.5 பால் நிலை :

பெண் - 1
ஆண் - 0

(ஏற்புடைய இலக்கத்தைக் கூட்டிற்குள் எழுதுக.

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2.3 அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.4 தொலைபேசி இலக்கம் :----.

3. 3.1 விவாகமானவரா/ விவாகமாகாதவரா ? :

விவாகமானவர்-1, விவாகமாகாதவர்-2

(ஏற்புடைய இலக்கத்தைக் கூட்டிற்குள் எழுதுக.

3.2 பிறந்த திகதி :

ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |

3.3 விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள் | | | மாதங்கள் | | | நாட்கள் | | |

3.4 தாங்கள் இலங்கைப் பிரசையாவது பிறப்பினாலா ? :----.

பதிவின் மூலமா ? :----.

4. 4.1 கல்வித் தகைமைகள் :

| பல்கலைக்கழகம் | பெற்றுள்ள பட்டம் | பட்டம் செல்லுபடியாகும் திகதி | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

4.2 வேறு தகைமைகள் :
------------------------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------------------------

4.3 அனுபவம் :
------------------------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------------------------

5. தாங்கள் ஏதேனும் குற்றத்திற்கு நீதிமன்றமொன்றினால் குற்றம்சாட்டப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டுள்ளீரா ? :----.

அவ்வாறு தண்டனை பெற்றிருப்பின் எவ்வாறான குற்றத்திற்கு எந்த நீதிமன்றத்தினால் எத்தகைய தண்டனை வழங்கப்பட்டது என்பது தொடர்பாக குறிப்பிடுக :----.

6. பரீட்சைக் கட்டணம் செலுத்திய ரசீது தொடர்பான விபரம் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட தபாலகத்தின் பெயர் :----.

(ii) ரசீது இலக்கம் மற்றும் திகதி :

இலக்கம் :----. திகதி :----.

(iii) செலுத்திய தொகை :----.

| ரசீது கழன்றுவிடாதவாறு இங்கே ஒட்டவும். |
|---|

7. விண்ணப்பதாரியின் சான்றிதழ் :

இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் சரியானவை என்றும் உண்மையானவை என்றும் கௌரவத்துடன் குறிப்பிடுகின்றேன். இங்கு ஏதாவதொரு தகவலை பூரணப்படுத்தாமல் அல்லது மற்றும் பிழையாகப் பூரணப்படுத்திய காரணத்தினால் ஏற்படும் நட்டத்தைப் பொறுப்பேற்பதற்கு ஒப்புதல் அளிக்கின்றேன். என்னால் வழங்கப்பட்ட இவ்வுறுதியுரை பொய்யானதென நிரூபிக்கப்பட்டால் நியமனம் பெறுவதற்கு தகுதியற்றவனாவேன் என்பதையும் நியமனத்தின் பின்னர் பதவி நீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் அறிவேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவிதத் தகவலையும் பின்னர் திருத்த மாட்டேன். மேலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நடாத்துவது தொடர்பாக விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படுவேன் என்பதையும் குறிப்பிடுகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

8. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................................... என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் அறிவேன் என்றும் அவர் எனது முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் என்றும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்றும் ரசீதை ஒட்டியுள்ளார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

9. திணைக்களத் தலைவரின் சிபாரிசு :

(அரசாங்க/மாகாண அரசாங்க/அரசாங்க கூட்டுத்தாபனங்களில் பணியாற்றுகின்ற விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி .......................................... இந்த அமைச்சின்/ திணைக்களத்தின்/ நிறுவனத்தின் .......................................... ஆக கடமையாற்றுகின்றார். அவரது விண்ணப்பத்தைச் சிபாரிசு செய்து முன்னிலைப்படுத்துகின்றேன். இந்தப் பதவிக்கு இவர் தெரிவுசெய்யப்படுமிடத்து இந்த நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியும்.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரையால் அத்தாட்சிப்படுத்தவும்.)
திகதி :----.

2-503

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.